



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 256 28.04.2026 செவ்வாய்க்கிழமை

Chennai Volume: 01 Issue: 256 Tuesday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


# பாஜகவில் இணைந்த 7 எம்பிக்கள்: மாநிலங்களவை தலைவர் ஒப்புதல்!

## பாஜக உறுப்பினர்களின் எண்ணிக்கை 106 இல் இருந்து 113 ஆக அதிகரிப்பு


**புதுடெல்லி, ஏப்.28:**

அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி சார்பில் நாடாளுமன்ற மாநிலங்களவையில் 10 உறுப்பினர்கள் இருந்தனர். இதில் கட்சியின் மாநிலங்களவை துணைத்தலைவராக ராகவ் சத்தா நியமிக்கப்பட்டு இருந்தார்.

நாடாளுமன்ற விவாதங்களில் தீவிரமாக பங்கேற்கும் சத்தா. பொது பிரச்சினைகள் குறித்து வீரியமாக பேசி மக்களின் கவனத்தை ஈர்த்து வருபவர். இதனால் ஆம் ஆத்மி மட்டுமின்றி அனைத்து கட்சிகளிலும் மதிப்பை பெற்று இருந்தார்.

சமீப காலமாக இவருக்கும், கட்சித்தலைமைக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவி வந்தது. இதனால் அவரை கட்சியின் மாநிலங்களவை துணைத்தலைவர் பதவியில் இருந்து கெஜ்ரிவால் நீக்கினார். மேலும் விவாதங்களிலும் அவர் பங்கேற்பதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இதனால் கட்சித்தலைமையுடன் மோதல் போக்கை கடைப்பிடித்து வந்த அவர், நேற்று ஆம் ஆத்மியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். அத்துடன் மேலும் 6 எம்.பி.க்களும் தன்னுடன் விலகுவதாக தெரிவித்தார்.



அதன்படி ராகவ் சத்தா, சந்தீப் பதக், அசோக் மிட்டல், முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங், சுவாதி மலிவால், ராஜிந்தர் குப்தா, விக்ரம் சானி ஆகிய 7 மாநிலங்களவை உறுப்பினர்கள் ஆம் ஆத்மியில் இருந்து திடீரென விலகினர்.

பஞ்சாப்பை சேர்ந்த அவர்கள் அனைவரும் பின்னர் பா.ஜனதாவில் இணைந்தனர். மாலையில் பா.ஜனதா தலைமை அலுவலகத்துக்கு வந்த அவர்களை கட்சியின் தேசிய தலைவர் நிதின் நபின் இனிப்பு வழங்கி வரவேற்றார்.

இந்த நிலையில், ராகவ் சத்தா உள்பட 7 எம்.பி.,க்கள் பாஜகவில் இணைந்ததற்கு மாநிலங்களவை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் ஒப்புதல் அளித்ததாக நாடாளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு அறிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் பாஜக உறுப்பினர்களின் எண்ணிக்கை 106 இல் இருந்து 113 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கிரண் ரிஜிஜு தனது பதிவில் தெரிவித்திருப்பதாவது: இவர்கள் 7 பேரும் ஒருபோதும் நாடாளுமன்ற மரபுகளுக்குப் புறம்பான நடத்தைகளில்ஈடுபட்டதில்லை, இழிவான சொற்களைப் பயன்படுத்தியதில்லை. பிரதமர் மோடியின் தொலைநோக்குமிக்க தலைமையின்கீழ் நாட்டைக் கட்டமைக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வரவேற்கிறோம். பிளவுவாத இந்தியா கூட்டணிக்கு விடைகொடுக்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆம் ஆத்மி கட்சிக்கு மாநிலங்களவையில் 10 எம்.பி.,க்கள் இருக்கும் நிலையில், மூன்றில் இரு பங்கு எம்.பி.,க்கள் பாஜகவில் இணைந்துள்ளனர். ஆகையால், கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் ஆம் ஆத்மி கட்சியால் தகுதிநீக்க நடவடிக்கை கோர முடியாது என்று கூறப்படுகிறது.

# கொடைக்கானலில் முதல்வர் ஸ்டாலினுடன் 2ம் நாளாக 'செல்ஃபி' எடுத்து மகிழ்ந்த பொதுமக்கள்

**திண்டுக்கல், ஏப்.28:**

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் 2-வது நாளாக நடைப்பயிற்சி மேற்கொண்ட முதல்வர் ஸ்டாலினை பார்த்ததும் பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

தமிழகசட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு நடந்து முடிந்துள்ள நிலையில் கொடைக்கானலில் 5 நாட்கள் தங்கி ஓய்வெடுப்பதற்காக குடும்பத்துடன் முதல்வர் ஸ்டாலின் வந்துள்ளார். நேற்று (ஏப்.26) காலை கொடைக்கானலின் இயற்கை அழகை ரசித்தபடி, நட்சத்திர ஏரி பகுதியில் குடும்பத்தினருடன் முதல்வர் ஸ்டாலின் நடைப்பயிற்சி மேற்கொண்டார்.

அப்போது, பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் அவருடன் கைக்குலுக்கி, செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர். ஒரு மணி நேரம் நடைப்பயிற்சிக்கு பிறகு தங்கும்



விடுதிக்குச் சென்ற அவர், நேற்று முழுவதும் அறையிலேயே தங்கி ஓய்வெடுத்தார். இதற்கிடையே, அவரது மனைவி துர்கா ஸ்டாலின், கொடைக்கானல் குறிஞ்சியாண்டவர் கோயிலில் குடும்பத்துடன் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

**பொதுமக்கள் ஆரவாரம்:**

இந்நிலையில் நேற்று (ஏப்.27) திங்கட்கிழமை காலை கொடைக்கானல் நகராட்சி மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும், வனப்பகுதியை ஒட்டிள்ள மனோரஞ்சிதம் அணை பகுதியில் மூலிகை காற்றை சுவாசித்தபடி, ஒரு மணி நேரம் நடைப்பயிற்சி மேற்கொண்டார்.

இதை அறிந்த, பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் அவரை பார்ப்பதற்காக அணையின் வெளிப்பகுதியில் காத்திருந்தனர். நடைபயிற்சி முடிந்து வெளியே வந்த முதல்வரின் காரை பார்த்ததும் துள்ளிக்குதித்து ஆரவாரத்தில் சத்தம் போட்டனர்.

சில நிமிடங்கள் காரை நிறுத்தி, காரில் இருந்தபடி பொதுமக்களுடன் கலந்துரையாடினார். அப்போது, போட்டி போட்டுக்கொண்டு பொதுமக்கள் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர். பின்னர், தங்கும் விடுதிக்கு சென்ற முதல்வர் இன்று மாலை சுற்றுலா இடங்களை சுற்றி பார்க்கவும், குடும்பத்தினருடன் நட்சத்திர ஏரியில் படகு சவாரி செய்யவும் திட்டமிட்டுள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# கூடங்குளத்தில் 3-வது அணு உலை சோதனை ஓட்டம் தொடக்கம்

**நெல்லை, ஏப்.28:**

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் உள்ள அணுமின் நிலையத்தில் ரஷிய நாட்டின் நிதி உதவியுடன் தலா ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட இரண்டு அணு உலைகள் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

இந்த இரண்டு அணு உலைகளில் இருந்தும் தமிழகத்திற்கு 1,152 மெகாவாட் மின் உற்பத்தி கிடைக்கிறது. தொடர்ந்து கூடங்குளத்தில் 3-வது அணு உலை அமைக்கும் பணி நடைபெற்று வந்தது. அந்த பணிகள் நிறைவடைந்த நிலையில், சோதனை முனையில் அணு உலையை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அதன்படி கூடங்குளம் 3-வது அணு உலை சோதனை ஓட்டம் இன்று தொடங்கியுள்ளது.

அணு உலைக்குள் நீர் பாய்ச்சும் பணி வெற்றிகரமாக தொடங்கியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து அடுத்தகட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

# திருவண்ணாமலையில் சித்ரா பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம் அறிவிப்பு

**திருவண்ணாமலை, ஏப்.28:**

திருவண்ணாமலையில் மலையை சிவனாக வழிபடுவதால் அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள மலையை சுற்றி பவுர்ணமி உள்ளிட்ட விசேஷ நாட்களில் 14 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட கிரிவலப்பாதையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள். இதில் கார்த்திகை தீபத் திருவிழாவின் போது மகா தீபம் ஏற்றப்படும் நாளிலும், சித்ரா பவுர்ணமி அன்றும் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கிரி வலம் செல்வார்கள்.

இந்த நிலையில், இந்த ஆண்டுக்கான சித்ரா பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரத்தை கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது. அதன்படி சித்ரா பவுர்ணமி வருகிற 30-ந் தேதி (வியாழக்கிழமை) இரவு 9.52 மணிக்கு தொடங்கி மறுநாள் மே 1-ந் தேதி (வெள்ளிக்கிழமை) இரவு 11.08 மணிக்கு நிறைவடைகிறது. இந்த நேரத்தில் கிரிவலம் செல்லலாம் என கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த ஆண்டும் சித்ரா பவுர்ணமியின் போது 30 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கிரிவலத்திற்கு வருவார்கள் என்று மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

அதனால் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

# விசாரணை நீதிமன்றங்களில் 3.50 கோடி குற்றவியல் வழக்குகள் தேக்கம்: நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ்

**சேலம், ஏப்.28:**

நாடு முழுவதும் 3.50 கோடி குற்றவியல் வழக்குகள் தேக்கம் அடைந்துள்ளன. விசாரணை நீதிமன்றங்களில் வழக்குகள் தேக்கமடையாமல் இருக்க வழக்கறிஞர்களும் நீதிமன்றமும் அரசும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம் என உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் வலியுறுத்தியுள்ளார்.

சேலம் அஸ்தம்பட்டியில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் ரூ.59.43 கோடியில் கட்டப்பட்ட நீதிமன்ற கட்டிடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் சுரேஷ்குமார், இளந்திரையன், ஜெயச்சந்திரன், குமரப்பன் பங்கேற்றனர்.

விழாவில், உயர் நீதிமன்றதலைமை நீதிபதி தர்மாதிகாரி பேசும்போது, நீதித்துறையும் அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் மக்களின் பாதுகாப்பு கேடயமாகத் திகழ்கிறது. நீதித்துறை அதிகாரம் மற்றும் செல்வாக்கு போன்றவற்றுக்கு பணியாமல் நீதியை நிலைநாட்டி வருகிறது.

நீதியின் மாண்பை போற்றும் வகையில், நீதி பரிபாலனம் அமைய வேண்டும் என்றார்




. புதிய நீதிமன்ற கட்டிடத்தை திறந்து வைத்து நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் பேசியதாவது: நாடு முழுவதும் 4.81 கோடி வழக்குகள் தேங்கியுள்ளன.

அவற்றில் 4.18 கோடி வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் உள்ளன. இந்த வழக்குகளில் குற்றவியல் வழக்குகள் மட்டும் 3.50 கோடியாகும். குற்றவியல் வழக்குகள் குறைந்திருக்க வேண்டும். உரிமையியல் வழக்குகள் அதிகமாக இருக்க வேண்டும். குற்றவியல் வழக்குகளில், 7 ஆண்டுகள் தண்டனை வழங்கக் கூடிய வழக்குகள் எண்ணிக்கை மட்டும் 2.50 கோடி. விசாரணை நீதிமன்றங்களில் மட்டும் 2.25 கோடி வழக்குகள் தேங்கியுள்ளன. இதுகுறித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் தெரிவித்தபோது, கமிட்டி அமைத்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார். தமிழகத்தில் மாநில அரசு, வழக்கறிஞர்கள், நீதித்துறை இணைந்து கமிட்டி அமைக்கப்பட்டது. வழக்குகள் தேக்கமடையாமல் இருக்க வழக்கறிஞர்களும் நீதிமன்றமும் அரசும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியமாகும்.

நாடு முழுவதும் தேங்கிக் கிடக்கும் 3.50 கோடி குற்றவியல் வழக்குகளில் பெரும்பான்மையானவை முடிக்கப்பட வேண்டியவை. ஆனால், சரியான அணுகுமுறை இல்லாததால் வழக்குகள் தேக்கமடைந்துள்ளன.

குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனை கொடுத்து, குற்றங்கள் நிகழாமல் தடுப்பதே நீதித்துறை பணி. குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும் குற்றங்கள், ஒரே வகையாக நிகழ்வது ஏன், குற்றங்கள் நிகழ கல்வியறிவு போதாமையா, செல்வமின்மையா என குற்றங்களுக்கான அடிப்படையை கண்டறிய வேண்டும். குற்றவாளிகளை கூண்டில் நிறுத்தி தண்டனை கொடுத்தால் அந்த நபரின் வழிதோன்றல்களும் அதே வழியில் செல்லும் ஆபத்தும் உள்ளது.

அவர்களையும் குற்றம் செய்யும் நிலைக்கு தள்ளிவிடக் கூடாது. எனவே, தேங்கி கிடக்கும் குற்றவியல் வழக்குகளை முடிக்க அனைவரது ஒத்துழைப்பும் அவசியம். முதல் ஒத்துழைப்பு அரசிடமிருந்து வரவேண்டும். இவ்வாறு பேசினார்.

விழாவில், சேலம் ஆட்சியர் அருண் தம்புராஜ், மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கவுதம் கோயல், சேலம் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் விவேகானந்தன், செயலாளர் நரேஷ் பாபு, குற்றவியல் வழக் கறிஞர்கள் சங்கத் தலைவர் இமயவர்மன், செயலாளர் முருகன் உள்படபலர் பங்கேற்றனர். தலைமை நீதித்துறை நடுவர் கமலக்கண்ணன் நன்றி கூறினார்.

## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை (28–04–2026)

பராபவ ஆண்டு, சித்திரை–15

பிறை: வளர்பிறை

திதி: துவாதசி இரவு 841 வரை பிறகு திரயோதசி.

நட்சத்திரம்: உத்திரம் நள்ளிரவு 12.06 வரை பிறகு அஸ்தம்

யோகம்: அமிர்த/சித்தயோகம்

ராகுகாலம்: பிற்பகல் 3.00–4,30 மணி.

எமகண்டம்: காலை 9.00–10.30 மணி

சூலம் – வடக்கு

நல்ல நேரம்: காலை 8–9 மணி. மாலை 5–6 மணி.

மேஷம் ....................சிறப்பு
ரிஷபம்.................மேன்மை
மிதுனம் ................ஆதரவு
கடகம்................பெருமை
சிம்மம் ................ தாமதம்
கன்னி..................ஜெயம்
துலாம் ....................... பரிசு
விருச்சிகம்....... அனுகூலம்
தனுசு.................. இன்பம்
மகரம் ...................உயர்வு
கும்பம்.............பொறுமை
மீனம் ...................... லாபம்

# அதிகரிக்கும் வெப்ப அலை: அரசு மருத்துவமனைகளில் ஓ.ஆர்.எஸ். கரைசல் வழங்க உத்தரவு



**சென்னை, ஏப்.28:**

தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், அதிகரிக்கும் வெப்ப அலையால் பொதுமக்களுக்கு நீர்ச்சத்து இழப்பு ஏற்படுவதை தடுக்க பொது சுகாதாரத்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொதுமக்களுக்கு இலவசமாக ஓ.ஆர்.எஸ். கரைசல் வழங்க சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது. அதே போல், நகர்ப்புற சுகாதார நிலையங்கள், மாநகராட்சி சுகாதார நிலையங்களிலும் ஓ.ஆர்.எஸ். கரைசல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அனைத்து பொது மருத்துவமனைகளிலும் வெயில் பாதிப்பு சிகிச்சைக்காக 'ஹீட் ஸ்ட்ரோக்' என்ற சிறப்பு வார்டு அமைக்க அமைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், ஹீட் ஸ்ட்ரோக் உயிரிழப்புகளை தடுக்க மாவட்ட சுகாதாரத்துறை அலுவலர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# விரைவில் தொடங்கும் கோடைவிழா: மலர் கண்காட்சிக்கு தயாராகும் ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா



நீலகிரி, ஏப்.28: நீலகிரி மாவட்டத்தில் நிலவும் இயற்கை அழகினையும், அங்குள்ள சுற்றுலா தலங்களையும் கண்டு ரசிக்க ஆண்டுதோறும் சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் இருப்பர்.

அதிலும் குறிப்பாக ஏப்ரல், மே மாதங்களில் கோடைவிடுமுறையை கொண்டாட லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் குடும்பம் குடும்பமாக ஊட்டிக்கு வருவார்கள்.

அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் விதமாக நீலகிரியில் மலர் கண்காட்சி, வாசனை திரவிய கண்காட்சி, ரோஜா கண்காட்சி, பழ கண்காட்சி என பல்வேறு விதமான கோடை விழா கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு தற்போது கோடைவிடுமுறை தொடங்கி விட்டதால் கடந்த சில நாட்களாகவே நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தமிழகத்தின் பிற மாவட்டங்கள் மட்டுமின்றி அண்டை மாநிலங்களான கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வந்துள்ளனர். அவர்கள் நீலகிரியில் நிலவும் சீதோஷ்ண நிலையை அனுபவித்து ரசித்து கோடைவிடுமுறை உற்சாகத்துடன் கழித்து வருகின்றனர்.

கோடைவிழாவில் முக்கிய இடத்தை பெறுவது ஊட்டி தாவரவியல் பூங்காவில் நடக்க கூடிய மலர்க்கண்காட்சி தான். இந்த ஆண்டுக்கான மலர் கண்காட்சி விரைவில் தொடங்க உள்ள நிலையில் தற்போது அதற்கான முன்னேற்பாடு பணிகள் நடந்து வருகிறது.

கண்காட்சியை முன்னிட்டு 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மலர் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளது. அதில் மேரிகோல்டு, பேன்சி, பிகோனியா, சால்வியா, டெய்சி, டாலியா போன்ற பல்வேறு வண்ண மலர்கள் பூத்து குலுங்குகின்றன. இவை அனைத்தும் கண்காட்சி மண்டபங்களில் அழகாக ஒழுங்குபடுத்தப்படவுள்ளது.


தற்போது பூங்காவில் சுற்றுலா பயணிகளை கவரும் விதமாக பூங்காவில் மலர் மாடங்கள் அமைக்கும் பணிகள், மலர் தொட்டிகள் அலங்காரம் செய்யும் பணிகள் வேகமாக நடந்து வருகிறது. இதுதவிர பூங்காவில் டைல்ஸ் பதிக்கும் மேம்பாட்டு பணிகளும் நடக்கிறது.

இதுமட்டுமின்றி, கோடை விழாவுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் கண்களை கவரும் வகையில் லட்சக்கணக்கான மலர்கள் தயார் நிலையில் உள்ளன. அந்த மலர்களை பூங்கா ஊழியர்கள் தொடர்ந்து பராமரித்து வருகின்றனர்.

மேலும், பூங்காவின் முகப்பு பகுதியில் உள்ள குளம் செயற்கை நீரூற்றாக மாற்றப்பட்டு வருகிறது. இந்திய வரைபட வடிவமைப்பில் அமைந்துள்ள பகுதி மற்றும் படிக்கட்டுகளும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

இந்த அனைத்து மேம்பாட்டு பணிகளும் விரைவில் நிறைவடையும் நிலையில், இந்த ஆண்டின் மலர்க் கண்காட்சி முந்தைய ஆண்டுகளை விட மிகச் சிறப்பாக அமையும் என்று தோட்டக்கலைத்துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## எவர் மீதும் வெறுப்புணர்வைக் காட்டாத பண்பிற் சிறந்தவர் பிட்டி தியாகராயர் – மு.க.ஸ்டாலின் புகழாரம்



சென்னை, ஏப்.28: பிட்டி தியாகராயர் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

நம் வேரான நீதிக்கட்சிக்கு நீர் வார்த்து வளர்த்த தந்தையாம் வெள்ளுடை வேந்தர் பிட்டி தியாகராயர் அவர்களின் பிறந்தநாள்.

மாநகராட்சி மன்றத் தலைமைப் பொறுப்பில் இருந்து சென்னையின் தொடக்கக்கால வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர். எவர் மீதும் வெறுப்புணர்வைக் காட்டாத பண்பிற் சிறந்தவர்.

பார்ப்பனரல்லாதாரின் உரிமைகள், கல்வி வளர்ச்சி ஆகியவற்றுக்காகத் தியாகராயர் ஆற்றிய பணிகள்தான் இன்றும் நம்மை இயக்கும் அதன் பயணம் மேலும் உறுதியோடு தொடரும்!

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தூத்துக்குடி–சென்னை விமான கட்டணம் ரூ.17 ஆயிரமாக உயர்வு



சென்னை, ஏப்.28: தமிழக சட்டசபை தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 23-ந்தேதி நடைபெற்றது. இதில் வாக்களிக்க சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் நேற்று திரும்பினர். பெரும்பாலானோர் பஸ், கார்கள் மற்றும் ரெயில்களில் வந்தாலும் சிலர் விமானங்களில் சொந்த ஊர்களில் இருந்து சென்னைக்கு வந்தனர்.

இதனால் நேற்று இரவில் இருந்து தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவை ஆகிய விமான நிலையங்களில் வழக்கத்தை விட பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. இதனால் பெரும்பாலான விமானங்களில் டிக்கெட்டுகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஓரிரு விமானங்களில் மட்டுமே, ஒரு சில டிக்கெட்டுகள் உள்ளன. அந்த டிக்கெட் கட்டணங்கள் பயணிகளை அதிர்ச்சி அடையும் விதத்தில், 3 மடங்கு வரை அதிகரித்துள்ளன.

தூத்துக்குடி-சென்னை வழக்கமான கட்டணம் ரூ.5,354 நேற்று இரவு முதல் நேற்று காலை வரை விமான கட்டணங்கள் ரூ.17,089 வரை உயர்ந்து இருந்தது. இதேபோல் மதுரை-சென்னை ரூ.8ஆயிரம் வரையும், திருச்சி-சென்னைக்கு ரூ.9 ஆயிரம் வரையும் உயர்ந்து இருந்தன. விமான கட்டணங்கள் பல மடங்கு அதிகரிப்பால் சொந்த ஊர்களுக்கு வாக்களிக்க சென்றவர்கள், பெரும் சிரமத்துடன் சென்னை திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

## வெப்ப அலை: அரசு மருத்துவமனைகளில் சிறப்பு வார்டு அமைக்க சுகாதாரத் துறை உத்தரவு!



சென்னை, ஏப்.28: தமிழ்நாட்டில் வெப்ப அலையால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் கோடை வெப்பம் அதிகமாக இருந்து வருவதால் மக்கள் பலரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். நீர்ச்சத்து இழப்பு, ஹீட் ஸ்ட்ரோக் போன்ற பிரச்னையால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் பாதிப்புகளைத் தடுக்கும் பொருட்டும் முறையாக சிகிச்சை அளிக்கும்பொருட்டும் அரசு மருத்துவமனைகளில் 'ஹீட் ஸ்ட்ரோக்' என்ற பெயரில் சிறப்பு வார்டு அமைக்க சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது.

அதேபோல வெப்ப அலையின் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க, தமிழகத்தின் அனைத்து அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ORS (உப்புச் சர்க்கரை கரைசல்) தடையின்றி வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேபோல விவசாய கூலித் தொழிலாளர்கள், கட்டுமான தொழிலாளர்களுக்கு ஓஆர்எஸ் கரைசல் வழங்க வேண்டும் என்றும் அரசு மருத்துவமனைகளில் ஓஆர்எஸ் கரைசலை பொதுமக்கள் இலவசமாக வாங்கிக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுகாதாரத்துறை அலுவலர்கள், இதுதொடர்பாக முன்னெச்சரிக்கைநடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சாதிய பாதுகாவலர்களே சாதி செல்வாக்கு குறித்துப் பேசுவது 'சாத்தான் வேதம் ஓதுவதே'

### பாஜகவை விமர்சித்த சண்முகம்



சென்னை, ஏப்.28: "சாதியை பாதுகாப்பவர்களே சாதி செல்வாக்கு செலுத்துவது குறித்துப் பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதே'.

சாதியை உருவாக்கிய கூட்டம், இப்போதும் அதைச் சரி என்று சாதிக்கும் கூட்டம், சாதிய அணிசேர்க்கைக்கு ஊக்கம் கொடுத்து உற்சாகமளிக்கும் கூட்டம், சாதியப் பாகுபாடுகளை, தீண்டாமையைக் கடைபிடிக்கும் கூட்டம் பாஜக - ஆர்.எஸ்.எஸ் என்பதை உலகம் அறியும்.

தேர்தல் அரசியலில் சாதி செல்வாக்கு செலுத்துவது குறித்து பாஜக தலைவர் நாராயணன் கூறியிருப்பது "சாத்தான் வேதம் ஓதுவது போல" இருக்கிறது.

"பண்பாடு" என்ற பெயரில் சாதியைக் காப்பாற்றுவதற்கு அடிப்படையாக இருப்பவர்களே நீங்களும், உங்கள் மதமும் தானே" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## நம்பிக்கை இருந்தால் அதிசயம் நடக்கும்: சூர்யா




மதுரை, ஏப்.28: நடிகர் சூர்யாவின் கருப்பு திரைப்படம் மே 14 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. நீண்ட நாள்களாக வெளியீட்டைச் சந்திக்காமல் இருந்ததால் சூர்யா ரசிகர்கள் ஆவலாகக் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில், இப்படத்தின் இசைவெளியீட்டு விழா நேற்று (ஏப்.26) நடைபெற்றது. இதில், சூர்யா, ஆர்ஜே பாலாஜி உள்பட படக்குழுவினர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் பேசிய நடிகர் சூர்யா, "கருப்பு இவ்வளவு தூரம் வந்ததற்கு கருப்புசாமியின் துணையே காரணம் என நினைக்கிறேன். இப்படத்தின் கதாநாயகன் நான் கிடையாது, கருப்புசாமிதான். படம் பார்த்தவர்கள் முதல்பாதி உணர்வுப்பூர்வமாகவும் இரண்டாம்பாதி திரையரங்க தருணங்கள் அதிகம் இருப்பதாகவும் கூறினார்கள். மே 14 உங்க கையில்தான் இருக்கிறது.

கண்டிப்பாக படம் உங்களுக்குப் பிடிக்கும். நம்பிக்கை இருக்கிற இடத்தில்தான் அதிசயம் நிகழும்." எனத் தெரிவித்துள்ளார்.

## சூடம்மாள் அம்மன் சிலை மீது சூரிய ஒளி படும் அபூர்வ காட்சி



தேனி, ஏப்.28: சின்னமனூர் அருகே உள்ள சூடம்மாள் கோயிலில் ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் அம்மன் சிலை மீது சூரிய ஒளிக் கதிர்கள் படும் அபூாவ நிகழ்வு திங்கள்கிழமை நடைபெற்றது.

தேனி மாவட்டம், சின்னமனூர் அடுத்த மூர்த்தி நாயக்கன்பட்டி சூடம்மாள் அம்மன் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தில் அம்மன் சிலை மீது சூரிய ஒளிக் கதிர்கள் படும் அபூாவ நிகழ்வு நடைபெறுவது வழக்கம்.


நிகழாண்டில், திங்கள்கிழமை (ஏப். 27) காலை கருவறை அம்மன் சிலை மீது சூரிய ஒளிக் கதிர்கள் படும் அபூர்வ நிகழ்வு நடைபெற்றது. முதலில் அம்மன் சிலையின் உச்சியில் பட்ட சூரிய ஒளிக் கதிர்கள் படிப்படியாக நகர்ந்து கால் பாதம் வரை வந்து மறைய ஆரம்பித்தது.

இந்த அபூர்வ நிகழ்வில் அம்மன் சிலை பிரகாசமாக காட்சியளித்ததை அங்கிருந்த ஏராளமான பக்தர்கள் கண்டு வழிபட்டனா்.

இந்த நிகழ்வின்போது பக்தர்கள் தங்களது வேண்டுதலை பக்தியுடன் முன் வைத்தனர்.

தமிழ்நாட்டில் இதுபோன்ற அபூர்வ கோயில்கள் நிறைய இருக்கின்றன. அறிவியல் வளர்ச்சிக்கு முன்பே, கட்டட கலை நிபுணர்கள் ஆகம விதிப்படி இதுபோன்ற தனித்துவமான கோயில்களை கட்டியுள்ளனர்.

## மெரினாவில் கார் தீப்பற்றி எரிந்ததால் பரபரப்பு



சென்னை, ஏப்.28: மெரினா கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த கார் தீப்பற்றி எரிந்த சம்பவம், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சென்னையில் மென்பொறியாளராகப் பணிபுரிந்து வரும் ஸ்ரீநாத் என்பவர், நேற்று அதிகாலை சூரிய உதயத்தைக் காண்பதற்காகத் தனது காரில் மெரினா கடற்கரைக்கு வந்தார்.

மெரினா சர்வீஸ் சாலையில் காரை நிறுத்திவிட்டு கடற்கரைக்குச் சென்றார். சிறிது நேரம் கழித்து அவர் மீண்டும் காரை நோக்கி வந்தபோது, எதிர்பாராத விதமாக கார் திடீரெனத் தீப்பற்றி எரியத் தொடங்கியது.

கண்ணிமைக்கும் நேரத்தில் தீ காரின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவியதால், அந்த இடமே கரும்புகை மண்டலமாகக் காட்சியளித்தது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அங்கிருந்த பொது மக்களும், நடைப்பயிற்சி மேற்கொண்டவர்களும் உடனடியாக காவல் துறையினருக்கும், தீயணைப்புத் துறைக்கும் தகவல் அளித்தனர்.

தகவலின் பேரில், திருவல்லிக்கேணி தீயணைப்பு நிலைய வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து, தீயை அணைத்தனர். எனினும், இந்த விபத்தில் கார் முற்றிலும் எரிந்து எலும்புக்கூடாக மாறியது.

அதிர்ஷ்டவசமாக கார் நிறுத்தப்பட்டிருந்த போது தீ விபத்து ஏற்பட்டதால் பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது. காரில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாகத் தீ விபத்து ஏற்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பது குறித்துக் காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஓசூரில் வடமாநில பெண் தொழிலாளியை பாலியல் வன்கொடுமை செய்தவர் கைது



ஓசூர்,ஏப்.28: ஓசூரில் வடமாநில பெண் தொழிலாளியை பாலியல் வன்கொடுமை செய்த பால் வியாபாரியை போலீஸார் கைது செய்தனர்.

வடமாநிலத்தைச் சேர்ந்த சுமார் 30 வயது மதிக்கத்தக்க திருமணமான பெண் ஒருவர் கடந்த 3 நாட்களுக்கு முன்னர் ஓசூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணிக்கு சேர்ந்தார்.

இவரது கணவர் சொந்த ஊரில் உள்ளார். கடந்த இரு நாட்களுக்கு முன்னர் தன்னுடன் தங்கியுள்ள தோழியிடம் பேசுவதற்காக அவ்வழியாக வந்த ஓசூர் பேகேப்பள்ளியைச் சேர்ந்த பால் வியாபாரி மகேஷ் (37) என்பவரிடம் அப்பெண் செல்போன் கேட்டுள்ளார்.

அதற்கு அவர் அந்த பெண்ணின் தோழி இருக்கும் பகுதிக்கு தான் செல்வதாக கூறியதோடு, தனது இருசக்கர வாகனத்தில் அங்கே கொண்டு போய் விடுவதாக கூறி அப்பெண்ணை வாகனத்தில் அழைத்து சென்றுள்ளார்.

ஆனால், அப்பெண்ணை தோழி இருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்லாமல் ஜுஜுவாடி பகுதியில் ஆட்கள் நடமாட்டம் இல்லாத மறைவான இடத்திற்கு அழைத்து சென்ற மகேஷ், அப்பெண்ணை கட்டாயப்படுத்தி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

இதுதொடர்பான புகாரின் பேரில் ஓசூர் அனைத்து மகளிர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி, தலைமறைவாக இருந்த மகேஷை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

## விழுப்புரத்தில் களைகட்டிய 'கூவாகம் திருவிழா - 2026'



விழுப்புரம், ஏப்.28: தேசிய திருநங்கைகள் கூட்டமைப்பு சார்பில் 'கூவாகம் திருவிழா - 2026' எனும் நிகழ்ச்சி விழுப்புரத்தில் நேற்றிரவு நடைபெற்றது. தேசிய விருது பெற்ற திரைப் பட நடிகை அர்ச்சனா, விழுப்புரம் நகர்மன்ற முன்னாள் தலைவர் ஜனகராஜ் உள்ளிட்டோர் குத்துவிளக்கு ஏற்றி வைத்து விழாவை தொடங்கி வைத்தனர்.

தமிழக அரசின் சிறந்த திருநங்கை விருது பெற்ற பொன்னி பரத குழுவினரின் பரத நாட்டியம் அரங்கேற்றப்பட்டது. மேலும் திருநங்கைகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. பல்வேறு துறைகளில் சாதித்துள்ள 25 திருநங்கைகள் கவுரவிக்கப்பட்டனர்.

முன்னாள் அமைச்சர் பொன்முடி அவர்களை பாராட்டி பரிசு வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது: திருநங்கை என பெயர் சூட்டியவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி. எல்லோரும் சமம், ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாது என்பதற்காக திருநங்கை என அழைத்தவர் கருணாநிதி.

மேலும் 2008-ல் நலவாரியம் அமைத்து கொடுத்தார். ஒரு காலத்தில் திருநங்கைகள் படிப்பதற்கு கூட அனுமதி இல்லை. அவர்கள் வழியில் நின்று கையேந்தி இருந்தனர். இன்று பள்ளி ஆசிரியர், கல்லூரி பேராசிரியர், தமிழில் முனைவர் பட்டம் பெற்று சாதனையாளர்களாக உள்ளனர். படிப்பதில் திருநங்கைகளுக்கு ஆர்வம் இருக்கிறது.

இவர்களும் படிக்க வேண்டும் என்பதற்காக கல்லூரியில் இடம் ஒதுக்கியவர் முதல்வர் ஸ்டாலின். மாநில திருநங்கை கொள்கை அறிவித்து பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவியை செயல்படுத்தி வருகிறார்.

குடும்பத்தில் உள்ளவர்களால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த வர்களுக்கு சென்னை மற்றும் மதுரையில் அரண் இல்லத்தை தொடங்கி வைத்தவர் முதல்வர் ஸ்டாலின். நலவாரியத்தில் அலுவல்சாரா உறுப்பினர்களாக திருநங்கைகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் புறக் கணிக்கப்பட வேண்டியவர்கள் இல்லை. நம்மில் ஒருவர். அவர்களும் மனிதர்கள். படித்து முன்னேற வேண்டும். அனைத்து துறைகளிலும் சாதிக்க வேண்டும். இதுதான் திராவிட மாடல். இவ்வாறு அவர் பேசினார்.

## ரயில்களில் மாற்றுத் திறனாளிகள் சிறப்பு பெட்டிகளில் பயணிக்க சலுகை



சென்னை, ஏப்.28: ரயில்வே வாரியம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்திய ரயில்வே வாரியம் சார்பில் இயக்கப்படும், ஒவ்வொரு சாதாரண மற்றும் விரைவு ரயில்களில், மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு பெட்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பயணிக்க, ரயில்வே வாரியம் வழங்கும் கட்டண சலுகை, பாஸ் பெற்றவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

இதர மாற்றுத் திறனாளிகள், முன்பதிவில்லாத சாதாரண பெட்டிகளில் கட்டணம் செலுத்தி பயணித்து வந்தனர். இந்நிலையில், தேசிய மாற்றுத் திறனாளி நலத்துறை வாயிலாக, யுடிஐடி என்னும் தனித்துவமான அடையாள அட்டை பெற்ற அனைவரும், இப்பெட்டிகளில் பயணிக்கலாம்.

ரயில்வே வாரியத்தின் கட்டண சலுகை பாஸ் பெற்றவர்களும் இப்பெட்டிகளில் பயணிக்கலாம். அத்தகைய பாஸ் பெறாத மாற்றுத் திறனாளிகள், கட்டண டிக்கெட் பெற்று, தங்கள் யுடிஐடி அட்டையை காட்டி, இந்த சிறப்பு பெட்டிகளில் பயணிக்கலாம். அனுமதியின்றி இப்பெட்டியில் பயணிக்கும் இதர பயணிகள் மீது, ரயில்வே சட்டத்தின் கீழ், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
• Location: (Nr Mylapore Jn)
• Direction: N/ Face
• Total Area: 2400 sft
• Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com

டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773

நிலம் தேவை
தெற்கு சென்னை
சென்னை
திருப்போரூர்
செங்கல்பட்டு
1 - 2 ஏக்கர்
திருப்போரூர்- செங்கல்பட்டு ரோடு
உடனடி தேவை!
தொடர்புக்கு
Ph: 6384617773

Annai Violet Arts & Science College
Seek Strive Succeed
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Key Features
Modern Infrastructure | Extensive Library
Expert Faculty | Result-Oriented Curriculum
Well-Equipped Labs | Competitive Exam Preparation
Sports & Skill Development | English Training
Prime Location | Strong Security
Seminar Hall | Personalized Student Support
Inter-College Competitions | Scholarships
Counseling & Mentoring | Industrial Visits
Interactive Learning | Strong Placement Support
Community Radio Station
Regional centre for ICMAI (Institute of Cost Accountants of India) Foundation / Intermediate
BANK LOAN AVAILABLE
Media & Broadcasting Courses Available. RJ / VJ Training given to Students
Free Transportation for Girl Students from Pattaravakkam Railway Station & Kallikuppam to College
UG & PG COURSES
SHIFT I
• B.C.A
• B.B.A
• B.Sc PHYSICS
• B.Sc COMPUTER SCIENCE
• B.Sc BIOCHEMISTRY
• B.Sc MICROBIOLOGY
• B.A TAMIL
• B.A ENGLISH
• B.A ECONOMICS
• B.COM (GENERAL)
• B.COM (ACCOUNTING & FINANCE)
• B.COM (CORP. SECRETARYSHIP)
• M.A ENGLISH
• M.COM
• M.Sc BIOCHEMISTRY
SHIFT II
• B.Com (GENERAL)
• B.Com (ISM)
• B.Sc PHYSICS
• B.Sc CHEMISTRY
• B.Sc COMPUTER SCIENCE
• B.Sc VISUAL COMMUNICATION
• M.Sc COMPUTER SCIENCE
• M.Sc MICROBIOLOGY
CERTIFICATE COURSE
• DIP. IN MEDICAL LAB TECHNOLOGY (DMLT)
• CERTIFICATE COURSE IN MEDICAL CODING
• PHOTOSHOP • COREL DRAW • TALLY PRIME
UNIVERSITY OF MADRAS - INSTITUTE OF DISTANCE EDUCATION LEARNING SUPPORT CENTRE
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388
No.53, Violet College Road, Menambedu, Ambattur, Chennai - 53.
info@violetcollege.in www.violetcollege.in

WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
2 ஏக்கர் விற்பனை
1 ஏக்கர் 25cr
வண்டலூர் கேளம்பாக்கம் ரோடு
17 ஏக்கர் விற்பனை
1 acre 16 cr
Ph. 9566055082

எலாவூர் மிக அருகில்
சுண்ணாம்பு குளம்
Sqft ₹120/_
(மினிமம் 10000sqft)
Ph.9600660997

உ
முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591, 9578622711

GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய் ₹ 1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

அகிலாண்டேஸ்வரி நகரில் வீட்டு மனைகள் உள்ளது
மனை அளவு = 30x40 = 1200 ச.அடி
மனை விலை 1,20,000/- மட்டும்
Cell :7305025591
இடம் : பத்தமடை உள்ளது திருநெல்வேலி மாவட்டம்
LOCATION

திருமுடிவாக்கம் அருகாமையில் அமைந்துள்ள சாரதா கம்பெனிக்கு
ஆட்கள் தேவை
ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை
கல்வி தகுதி
10 முதல் any Degree
தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு
சம்பளம் :
18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com

துபாயை தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட் (Would Be Global Pvt Ltd) ஆன்-லைன் வர்த்தக E-Commerce நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
* Car Foam Pressure Wash
* Teflon Coating
* Ceramic Wax Treatment
* Under Chassis Painting
* Interior Foam Wash / Stain Remover
* Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.

WANTED
OFFICE BOY
GUINDY
CALL US
7550093245 / 7358696451

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com

WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US
7550093245 / 7358696451

# கவிதை அரங்கம்!





பூக்களுக்குக் கூடத்
தெரியாது, நீ சிரிக்கும்
போது அவை வாடிப்
போகின்றன என்று.


நீ தொடும் இடமெல்லாம்
பூக்களாகப் பூக்கின்றன
என் இதயத்தில்.

என் சிறு சிறு அடம்
பிடிப்புகளுக்கு உன்
முத்தங்களே முற்றுப்புள்ளி.

ஆயிரம் உறவுகள்
இருந்தாலும், உன்
ஒரு உறவே என்
வாழ்க்கைக்குப்
போதுமானது.

நீ மறைந்து நின்றாலும்
உன் வாசனை உன்னை
என்னிடம் காட்டிக்
கொடுத்துவிடும்.

# வாழ்க்கை தத்துவம்...



அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்படாதே.

உழைக்காமல் வரும் பணம் நிலைக்காது.

ஏழைகளுக்கு உதவுவது இறைவனுக்குச் செய்யும் தொண்டு.

செல்வம் என்பது பிறருக்குப் பயனுள்ளதாக இருக்கும் போதே மதிப்பைப் பெறுகிறது.

ஆடம்பரம் ஒரு போலித்தனமான மகிழ்ச்சி.

திருப்தி இல்லாத மனிதன் எவ்வளவு கோடி இருந்தாலும் ஏழைதான்.

பணத்தால் பொருளை வாங்கலாம், நிம்மதியை வாங்க முடியாது.

# சிவப்பு துண்டு

கோயம்புத்தூரின் அந்தப் பன்னாட்டுப் பாதுகாப்பு அலுவலகத்தில் (SECURITY OFFICE) அன்று ஒரு முடிவும், ஒரு தொடக்கமும் கைகோர்த்திருந்தது. அது ஜீவாவின் இறுதி வேலைநாள். கடந்த 12 ஆண்டுகளாக அங்கு செயல்பாட்டு அலுவலராகப் பணியாற்றி வந்த அவருக்கு, தகுதியிருந்தும் பட்டப்படிப்பு இல்லை என்ற ஒற்றைக் காரணத்தால் மேலாளர் பதவி மறுக்கப்பட்டது. அந்த ஏமாற்றம்தான் அவரை வேறொரு நிறுவனத்திற்கு மாறத் தூண்டியது. மேசையில் இருந்த கோப்புகளை ஒவ்வொன்றாக அடுக்கிக் கொண்டிருந்த ஜீவாவின் மனதிற்குள் ஏதோ ஓர் இனம் புரியாத அலைபாய்தல். அப்போது ஒலித்த அந்தத் தொலைபேசி அழைப்பு அவரை உறைய வைத்தது.

"என்னது? கோபிநாத் பெஹரா இறந்துட்டானா? நேற்று இரவு கூடப் பேசினேனே... இதோ கிளம்பி வருகிறேன்!" ஜீவாவின் குரல் நடுக்கத்தில் தழுதழுத்தது.

மருத்துவமனைக்கு ஜீவாவுடன் அவரது உயரதிகாரி சார்லசும், மனிதவள அதிகாரி ரமேஷும் வந்திருந்தனர். கோவை போன்ற ஊர்களில் இது போன்ற சிக்கலான தருணங்களைக் கையாளும் துணிச்சல் அவர்களுக்கு இல்லை என்பதால் ஜீவாவின் உதவியை நாடினர். ஜீவா ஒரு தீவிர இடதுசாரி சிந்தனையாளர்; எளிய மக்களின் பிரச்சனை என்றால் தயங்காமல் களத்தில் இறங்குபவர். உடனே தனது கட்சித் தோழர்களுக்கும், பாதுகாப்புப் பணியாளர் சங்கத்தினருக்கும் தகவல் தெரிவித்தார். அடுத்த சில நிமிடங்களில் அந்த இடமே பரபரப்பானது.

மருத்துவமனையின் மூன்றாவது மாடி நடைபாதை முழுவதும் பதற்றம் கவிழ்ந்திருந்தது. போலீசார் அறிக்கை எழுதிக் கொண்டிருக்க, ஒரு மூலையில் தரையில் அமர்ந்து தன் ஆறு மாதக் குழந்தையுடன் கதறி அழுது கொண்டிருந்தாள் இந்து மாஜி. ஒடிசாவிலிருந்து வந்த அந்தப் பெண்ணும், கோபிநாத்தும் வெவ்வேறு சாதியினர். காதலுக்காகச் சொந்த மாநிலத்தை விட்டு, குடும்பத்தை எதிர்த்துத் தமிழ்நாட்டிற்குத் தஞ்சம் புகுந்தவர்கள். இப்போது கோபிநாத் இல்லை. இனி அவளால் ஒடிசாவிற்குத் திரும்ப முடியாது; அங்கே அவளை யாரும் ஏற்க மாட்டார்கள். அவளுக்குப் புகலிடம் இந்தத் தமிழ்நாடு மட்டும்தான்.

அருகில் நின்ற ராகேஷ் பெஹரா அழுதுகொண்டே சொன்னான்: "6 மணிக்கு நன்றாகத்தான் சாப்பிட்டான் சார்... 8:30-க்கு ஊசி போட்டார்கள்... அடுத்த ஐந்தே நிமிடத்தில் துடிதுடித்துப் போய்விட்டான்". ராகேஷ், இறந்துபோன கோபிநாத்தின் மூத்த சகோதரன்.

பேச்சுவார்த்தை அறைக்குள் ஒரு பக்கம் ஜீவாவும் அவனது தோழர்களும், மறுபக்கம் மருத்துவமனை நிர்வாகமும் அமர்ந்திருந்தனர். நிர்வாகத்தின் பக்கம் நின்ற சில அரசியல் புள்ளிகளில் ஒருவரது தோளில் 'சிகப்பு துண்டு' மின்னியது. அங்கிருந்த ராம் மெதுவாக ஜீவாவிடம் கேட்டார்:

"ஐயா... நமக்காகப் பேச வந்திருப்பவர்களும் சிகப்பு துண்டு அணிந்திருக்கிறார்கள், நிர்வாகத்திற்கு ஆதரவாகப் பேசுபவர் தோளிலும் சிகப்புதான் இருக்கிறது. நீங்கள் இருவருமே தோழர்கள் தானே? பின் ஏன் அவர் அந்தப் பக்கம் நிற்கிறார்?"

ஜீவா மென்மையாகச் சிரித்தார். "தோழர் என்ற பெயர் மட்டும் போதாது ராம், மனநிலைதான் முக்கியம். நாம் அனைவரும் இந்த முதலாளித்துவச் சமூகத்தில் வளர்ந்தவர்கள். அந்தப் பண்பு சிலரை விட்டுத் துரிதமாகப் போகாது. கட்சி உறுப்பினராகலாம், ஆனால் சித்தாந்த ரீதியாக மனம் மாறக் காலமாகும். அந்தத் துண்டு அணிந்திருப்பதால் மட்டுமே ஒருவர் தோழராகிவிட முடியாது."

சற்று நேரத்தில் பீளமேடு காவல் நிலைய அதிகாரிகள் அங்கே வந்து கூட்டத்தைக் கலைக்க முயன்றனர். ஆனால், உடன் வேலை செய்தவனின் உயிரிழப்பு தந்த சோகமும், 'பாதுகாவலர்கள்' என்ற உணர்வும் அவர்களை அசைக்க முடியாத பாறையாக அங்கேயே நிற்க வைத்தது.

நீண்ட போராட்டத்திற்குப் பிறகு நிர்வாகம் இறங்கி வந்தது. "2.40 லட்சம் ரூபாய் இழப்பீடும், அந்தப் பெண்ணுக்கு வேலையும் தருகிறோம்" என்றனர்.

ஜீவா உறுதியாக மறுத்தார். "அவள் காதலுக்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டு இந்த மண்ணுக்கு வந்தவள். கையில் ஆறு மாதக் குழந்தையை வைத்துக்கொண்டு அவளால் எப்படி வேலைக்குப் போக முடியும்? உங்களுக்கு உண்மையிலேயே மனிதாபிமானம் இருந்தால் 3 லட்சம் ரூபாயை அவளது பெயரில் வைப்பு நிதி (DEPOSIT) செய்யுங்கள். அதன் வட்டியாவது அவள் வாழ்க்கையை நடத்தட்டும்". இறுதியில் நிர்வாகம் அதற்கு ஒப்புக்கொண்டது.

இரவு வெகுநேரம் ஆகிவிட்டது. கோபிநாத்தின் உடல் அவர் வசித்த வாடகை வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் வீட்டு உரிமையாளர் தடுத்தார். "இங்கே உடலை வைக்க முடியாது. மற்ற குடும்பங்கள் அசௌகரியமாக உணர்வார்கள்".

ஜீவா அவரிடம் நிதானமாகப் பேசினார். "ஐயா, அவர் இங்கேதான் வசித்தார். முறையாக வாடகை கொடுத்துத் தன் குடும்பத்துடன் வசித்த வீடு இது. உயிருடன் இருக்கும்போது நாம் உதவாவிட்டாலும், இறந்த பின் அவரை அமைதியாக வழியனுப்பவாவது ஒத்துழைக்கக் கூடாதா?". மனம் மாறிய உரிமையாளர் உடலை வைக்கச் சம்மதித்தார்.

மறுநாள் தகனம் முடிந்து அந்தப் புகை வானில் கரைந்தது. ராகேஷ் ஜீவாவிடம் வந்து, "சார், இந்தக் குழந்தையை நான் சட்டப்படி தத்தெடுத்து வளர்க்கிறேன். இந்துவையும் நானே பார்த்துக்கொள்கிறேன்" என்றான்.

ஜீவா அவன் தோளில் கை வைத்தார். "இப்போது உணர்ச்சிவசப்பட்டு எதையும் முடிவு செய்ய வேண்டாம் ராகேஷ். அஸ்தியைக் கரைத்து சில மாதங்கள் ஆகட்டும். இந்துவின் மனது ஆறும்வரை காத்திருப்போம். பிறகு நானே வந்து பேசுகிறேன்."

காலம் மெல்லக் காயங்களை ஆற்றியது. சில மாதங்கள் கழித்து ஜீவா இந்துவிடம் பேசி அவளது சம்மதத்தைப் பெற்றார். ஒரு சிறிய கோவிலில் அந்தத் திருமணம் நடந்தது. இந்து 'சாம்பல்புரி' பட்டுப் புடவையிலும், ராகேஷ் வெள்ளை குர்தாவிலும் நின்றனர். சில ஒடிசா இளைஞர்களும், பாதுகாப்புப் பணி நண்பர்களும் சாட்சியாக நிற்க, ஜீவா அட்சதை தூவி வாழ்த்தினார். அந்தக் குழந்தை எதைப் பற்றியும் கவலைப்படாமல் அமைதியாகச் சிரித்தது. சாதியாலும் சொந்தக் குடும்பத்தினராலும் புறக்கணிக்கப்பட்டு, இறுதியில் மருத்துவப் பிழையால் காதலனை இழந்த அந்தப் பெண்ணின் வாழ்க்கையை விதி சோதித்துப் பார்த்தது. ஆனால், அவசரப்படாமல் மனிதாபிமானத்துடன் எடுக்கப்பட்ட ஒரு தீர்க்கமான முடிவு, இன்று மூன்று உயிர்களுக்குப் புதிய வாழ்வைத் தந்தது.

நிச்சயமாக... மனிதம் மிஞ்சும்!

- முற்றும் -

**எஸ். ஜி.சிவக்குமார்**

கொயம்புத்தூர் -641045.

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



கேள்வி: கரண்ட் (CURRENT) போயிட்டா நம்மால பார்க்க முடியாது. ஆனா கரண்ட்டால நம்மள பார்க்க முடியுமா?
பதில்: முடியும். ஏன்னா, அதுக்குதான் 'மெயின் பெட்டி' (EYE/கண்) இருக்கே!

வாழ்க்கைங்கிறது ஒரு 'ஐஸ் கிரீம்' மாதிரி...
சாப்பிட்டாலும் கரையும்,
சாப்பிடலனாலும் கரையும்!
ஆனா... அது 'வெண்ணிலா'வா இல்ல 'சாக்லேட்'டாங்கிறது தான் முக்கியம்!



# தினம் ஒரு சமையல்



## முருங்கைக்காய் கத்திரிக்காய் சாம்பார்

**தேவையான பொருட்கள்:**

துவரம் பருப்பு - 1/2 கப்
முருங்கைக்காய் - 1 (துண்டுகளாக நறுக்கியது)
கத்திரிக்காய் - 2 (துண்டுகளாக நறுக்கியது)
தக்காளி - 1 (நறுக்கியது)
சின்ன வெங்காயம் - 10
புளி கரைசல் - 1/4 கப்
சாம்பார் பொடி - 2 மேசைக்கரண்டி
மஞ்சள் தூள் - 1/4 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
தாளிக்க: எண்ணெய், கடுகு, உளுத்தம் பருப்பு, வெந்தயம், கறிவேப்பிலை, பெருங்காயத் தூள்.

**செய்முறை:**



துவரம் பருப்பை மஞ்சள் தூள் சேர்த்து குக்கரில் நன்கு வேகவைத்து மசித்துக் கொள்ளவும்.
ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி தாளிக்கும் பொருட்களைச் சேர்க்கவும்.
பின் வெங்காயம், தக்காளி சேர்த்து வதக்கவும்.
முருங்கைக்காய், கத்திரிக்காய் சேர்த்து வதக்கி, சாம்பார் பொடி மற்றும் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி வேகவைக்கவும்.
காய்கள் வெந்ததும் புளி கரைசல் மற்றும் உப்பு சேர்க்கவும்.
புளி பச்சை வாசனை போனவுடன், வேகவைத்த பருப்பைச் சேர்த்து நன்கு கொதிக்கவிடவும்.
கடைசியாக மல்லித்தழை தூவி இறக்கவும்.

# இண்டு பயன்கள்



"இண்டு" (அல்லது இண்டை) என்பது ஒரு வகை முட்செடி ஆகும். இது பெரும்பாலும் வேலிச் செடியாகவும், காடுகள் மற்றும் தரிசு நிலங்களில் புதராகவும் வளரும் தன்மை கொண்டது.

சித்த மருத்துவம் மற்றும் நாட்டு மருத்துவத்தில் இதன் வேர், இலை, தண்டு ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும், இண்டுச் செடியில் முட்கள் இருப்பதால், அதை மருத்துவத்திற்குப் பயன்படுத்தும் முன் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும் மற்றும் தகுந்த மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

இண்டுச் செடியின் முக்கிய பயன்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

1. சுவாசப் பை நோய்கள் (RESPIRATORY ISSUES)
சளி மற்றும் இருமல்: இண்டு இலையின் சாறு அல்லது அதன் வேரைக் கொண்டு தயாரிக்கப்படும் கஷாயம், தீராத சளி, இருமல் மற்றும் கபத்தை அகற்றப் பயன்படுத்தப்படுகிறது.
ஆஸ்துமா (ASTHMA): சுவாசப் பாதையைச் சீராக்கி, ஆஸ்துமா மற்றும் ஈளை போன்ற நோய்களின் தீவிரத்தைக் குறைக்க இது உதவுகிறது.
பீனிசம் (SINUSITIS): ஜலதோஷத்தினால் ஏற்படும் தலைப்பாரம், மூக்கடைப்பு போன்ற பிரச்சனைகளுக்கு இது மருந்தாகிறது.


2. செரிமான மண்டலம் (DIGESTIVE SYSTEM)
வயிறு கோளாறுகள்: மாந்தம் (குழந்தைகளுக்கு ஏற்படும் செரிமானக் குறைபாடு), வாயுத் தொல்லை மற்றும் வயிற்று வலி போன்றவற்றைக் குணப்படுத்த இண்டு பயன்படுத்தப்படுகிறது.

3. பொதுவான ஆரோக்கியம் (GENERAL HEALTH)
நாடி நடையை அதிகரித்தல்: உடலில் இரத்த ஓட்டத்தைச் சீராக்கி, நாடி நடையை அதிகரிக்க (STIMULATING THE PULSE) இது உதவுவதாகக் கருதப்படுகிறது.
காய்ச்சல்: பொதுவான காய்ச்சல் மற்றும் குளிர்ச்சியான தன்மையைக் குறைக்க இது பயன்படுத்தப்படுகிறது.

4. பிற பயன்கள் (OTHER USES)
வேலிச் செடி: முட்கள் நிறைந்திருப்பதால், விவசாய நிலங்கள் மற்றும் தோட்டங்களுக்குப் பாதுகாப்பு வேலியாக இது வளர்க்கப்படுகிறது.
கரி தயாரித்தல்: இதன் விறகுகள் துப்பாக்கி வெடிமருந்து தயாரிக்கத் தேவையான கரி (CHARCOAL) உற்பத்திக்கு ஏற்றவை என்று கருதப்படுகிறது.




# சூர்யா சார் படம்னா சும்மாவா? வெளியான 'கருப்பு' பட முதல் விமர்சனத்தால் குஷியில் ரசிகர்கள்



நடிகர் சூர்யா மற்றும் த்ரிஷா நடித்துள்ள கருப்பு திரைப்படம் தற்போது ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது. இந்த படத்தை RJ பாலாஜி எழுதி இயக்கியதுடன், முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார்.

இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார். இது அவர் முதன்முதலில் கமிட் ஆன படம் என்றாலும், பின்னர் அவர் பணியாற்றிய சில படங்கள் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இதனால் "கருப்பு" படத்தின் இசைக்கும் தனியான எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

இன்று மதுரையில் நடைபெற்ற இசை வெளியீட்டு விழா மிகப் பிரமாண்டமாக நடைபெறுகின்றது. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட படத்தின் எடிட்டர் படத்தைப் பற்றிய தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். அவர் கூறுகையில், "இந்த படம் முழுக்க முழுக்க மாஸாக இருக்கும். ஜாலியான காட்சிகளும், அதே நேரத்தில் கண்களுக்கு விருந்தாக இருக்கும் விஷுவல்களும் ரசிகர்களை கவரும். திரையரங்கில் பார்க்க வேண்டிய தரமான அனுபவமாக இது இருக்கும்" என உற்சாகமாக தெரிவித்தார்.

மேலும், சூர்யாவின் ரசிகராக இருந்து அவருடன் இந்த படத்தில் பணியாற்றியது தனது வாழ்க்கையின் பெருமையான தருணங்களில் ஒன்றாகும் என்றும் அவர் கூறினார். விரைவில் டிரெய்லர் வெளியாகவுள்ளது என்றும், அதற்கான பணிகள் மாஸாக நடைபெற்று வருகின்றன என்றும் குறிப்பிட்டார். இந்த கருத்துகள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி, படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.



சுந்தரி சீரியல் நடிகை கேப்ரியல்லாவின் லேட்டஸ்ட் போட்டோஸ்

# 'திரிஷ்யம்-3' திரைப்படத்தின் லேட்டஸ்ட் தகவலை வெளியிட்ட படக்குழு.! என்ன தெரியுமா?



மலையாள சினிமாவின் மிகப்பெரிய வெற்றிப் படங்களிலொன்றான திரிஷ்யம், கடந்த 2013ஆம் ஆண்டு மோகன்லால் மற்றும் மீனா நடிப்பில் வெளியாகி திரையுலகில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. வெறும் ரூ.5 கோடி பட்ஜெட்டில் தயாரான இப்படம், ரூ.75 கோடிக்கும் மேல் வசூல் செய்து சாதனை படைத்தது. இதன் வெற்றியால், இப்படம் தமிழில் பாபநாசம் என்ற பெயரில் கமல்ஹாசன் நடிப்பில் ரீமேக் செய்யப்பட்டது. மேலும், தெலுங்கு, கன்னடம், இந்தி மற்றும் சீன மொழிகளிலும் இப்படம் உருவாகி உலகளவில் கவனம் பெற்றது.

இந்த படத்தை ஜீத்து ஜோசப் இயக்கியிருந்தார். அதன் தொடர்ச்சியாக வெளியான திரிஷ்யம் 2 திரைப்படமும் நேரடியாக ஓடிடியில் வெளியாகி மிகுந்த வரவேற்பைப் பெற்றது.


தற்போது, ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வரும் திரிஷ்யம் 3 திரைப்படம் குறித்து புதிய தகவல் வெளியாகியுள்ளது. மலையாளத்திலும் இந்தியிலும் ஒரே நேரத்தில் உருவாகி வரும் இந்த படம், வரும் மே 21ஆம் தேதி உலகம் முழுவதும் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது ரசிகர்களின் எதிர்பார்ப்பை மேலும் உயர்த்தியுள்ளது.

























# WANTED

## ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN

EGMORE, MOUNT ROAD

CALL US
7550093245 / 7358696451



# தெலங்கானா: தனியார் பேருந்தில் திடீர் தீ விபத்து

**ஹைதராபாத், ஏப்.28:**

தெலங்கானா மாநிலம், மேடக்கிலிருந்து ஹைதராபாத் நோக்கி திங்கள்கிழமை அதிகாலை சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தில் தீ விபத்து ஏற்பட்டது. தகவல் அறிந்து அங்கு விரைந்த தீயணைப்புத் துறையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்தச் சம்பவத்தில் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை.

இதுகுறித்து தீயணைப்புத் துறை அதிகாரி கூறுகையில், "மேடக்கிலிருந்து ஹைதராபாத் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து, நேற்று அதிகாலை மேடக் மாவட்டத்தின் மசாய்பேட்டில் தீப்பிடித்தது. பழுதுபார்ப்பதற்காக ஹைதராபாத் சென்று கொண்டிருந்த அந்தப் பேருந்தில் ஓட்டுநர் மற்றும் மற்றொரு நபர் மட்டுமே இருந்தனர்.

தீயைக் கண்டதும் அவர்கள் உடனடியாகக் கீழே இறங்கினர். மேலும் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. தீயணைப்பு வாகனம் சம்பவ இடத்திற்கு வந்து தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தது. தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை," என்று தெரிவித்தார்.

# பொதுக்கூட்டத்தில் ஓவியம் அளித்த சிறுமிக்கு பிரதமர் மோடி கடிதம்



**முர்ஷிதாபாத், ஏப்.28:**

பொதுக்கூட்டத்தில் ஓவியம் வழங்கிய சிறுமிக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்.

மேற்குவங்கம் முர்ஷிதாபாத் மாவட்டம் ஜாங்கிப்பூர் பகுதியில் சமீபத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார். பிரதமர் பங்கேற்கும் கூட்டங்களில் எல்லாம், மோடியின் உருவ படத்தை வரைந்து மாணவ, மாணவிகள் உற்சாகத்துடன் காட்டுகின்றனர். அந்த படங்களை பிரதமர் மோடி பெற்றுக்கொள்கிறார்.

இந்நிலையில் மேற்குவங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வரைபடத்தை அன்பளிப்பாக வழங்கிய சிறுமி பிரிஸ்தி மொந்தலக்கு பிரதமர் மோடி கடந்த 24-ம் தேதி கடிதம் அனுப்பியுள்ளார். அதில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது: மேற்கு வங்கத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், உன்னிடம் பெறப்பட்ட அழகான வரைபடம் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

உனது முயற்ச்சி, அர்ப்பணிப்பு ஆகியவை உனது வரைபடத்தில் பிரதிபலிக்கிறது. உன்னைப்போன்ற மக்களிடம் இருந்து பெறப்படும் அன்பு என்னுள் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தி, நாட்டை முன்னேற்றி, இளைஞர்களின் எதிர்காலத்துக்காக புதிய இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற எனது உறுதியை வலுப்படுத்துகிறது.

மேற்கு வங்கத்தின் கலாச்சாரம், அறிவும் படைப்பாற்றலும் கலந்த கலவை. இங்கு இலக்கியம், இசை, நாடகம், காட்சி கலை ஆகியவை நவீன இந்தியாவின் சிந்தனையை உருவாக்கியுள்ளன. நமது இளைஞர்கள் இடையே காணப்படும் இது போன்ற படைப்பாற்றல் என்னிடம் பெருமிதத்தையும், நம்பிக்கையும் ஏற்படுத்துகிறது. உனது சிறந்த எதிர்காலத்துக்கு வாழ்த்துகள். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி கடிதத்தில் குறிப்பிட்டு உள்ளார்.

# பாஜக ஆட்சிக்கு வந்தால் முத்தலாக் தடை அமலாகும்: மே. வங்கத்தில் அமித் ஷா உறுதி

**ரானாகாட், ஏப்.28:**



மேற்கு வங்கம் நாடியா மாவட்டம் ரானாகாட் தொகுதியில் நேற்று நடைபெற்ற பாஜக தேர்தல் பிரச்சார கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பங்கேற்றார்.

அப்போது அவர் பேசியதாவது: மேற்கு வங்கத்தில் மே 4-ம் தேதி வாக்கு எண்ணிக்கையில் பாஜக ஆட்சி அமைப்பதற்கான வெற்றி செய்தி கிடைக்கும். பாஜக ஆட்சிக்கு வந்தால், பல சட்டப்பூர்வமான நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும்.

முத்தலாக் முறைக்கு தடை விதிக்கப்பட்டு பலதார மணம் முடிவுக்கு கொண்டு வரப்படும். பெண்கள் மற்றும் வேலையற்ற இளைஞர்களின் வங்கிக் கணக்கில் மாதந்தோறும் ரூ.3,000 செலுத்தப்படும். பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம். கால்நடைகள் கடத்தப்படுவதை தடுக்க சிறப்பு படை அமைக்கப்படும். இவ்வாறு அமித் ஷா பேசினார்.

# 2026-27 கல்வியாண்டு முதல் புதுச்சேரி அரசுப் பள்ளிகளில் மும்மொழிக் கொள்கை கட்டாயம்

**புதுச்சேரி, ஏப்.28:**

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலுள்ள அரசுப் பள்ளிகளில் வரும் கல்வியாண்டு முதல் மும்மொழிக் கொள்கை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளும் கடந்த 2024-ஆம் ஆண்டு முதல் சிபிஎஸ்இ பள்ளிகளாக மாற்றப்பட்டன.

தேசிய கல்விக் கொள்கை வழிகாட்டுதல் அடிப்படையில் 2026-2027-ஆம் கல்வியாண்டு முதல் இந்தப் பள்ளிகளில் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்த வேண்டியது கட்டாயமாகியுள்ளது. அதன்படி, ஹிந்தி மொழியை புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஏற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

புதுச்சேரி பிரெஞ்சு ஆட்சியில் இருந்த பகுதி என்பதால், இங்கு மாணவர்கள் பிரெஞ்சு மொழியைக் கூடுதலாகப் பயின்று வந்தனா.

தேசிய கல்விக் கொள்கை அடிப்படையில், 2026-2027 கல்வியாண்டு முதல் மும்மொழிக் கொள்கை 6- ஆம் வகுப்பிலிருந்து கட்டாயமாக்கப்படுகிறது.

இந்த மும்மொழிக் கொள்கை 10- ஆம் வகுப்பு வரை தொடர வேண்டும். அதுவும் இந்த மும்மொழிக் கொள்கையில் 2 மொழிகள் இந்திய மொழிகளாக இருக்க வேண்டியது கட்டாயம். மொழிப் புலமை, கலாசாரப் புரிந்துணாவு, தேசிய ஒருமைப்பாட்டை கற்றுக்கொள்ளும் வகையில் 2 இந்திய மொழிகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைப் பொறுத்தவரை 4 பிராந்தியங்களிலும் ஆங்கிலம் என்ற அந்நிய மொழியில்தான் பாடப் புத்தகங்கள் இருக்கின்றன. அதனால் இங்கு அந்நிய மொழியான பிரெஞ்சு உள்ளிட்ட மொழிகளுக்கு இடமில்லை.

மேலும், புதுச்சேரி, காரைக்கால் உள்ளிட்ட பிராந்தியங்களில் தமிழ் முதல்மொழியாக உள்ளது. மாஹேயில் மலையாளம் முதல் மொழி. ஏனாமில் தெலுங்கு முதல் மொழி.

அதனால் இரண்டாவது இந்திய மொழியாக ஹிந்தி இடம் பெறுமா? அல்லது வேறு இந்திய மொழி இடம் பெறுமா? என்பதுதான் கேள்விக் குறி. 2-ஆவது இந்திய மொழிகளாக மலையாளம், தெலுங்கு, சம்ஸ்கிருதம், பஞ்சாபி, பெங்காலி அல்லது மராத்தி உள்ளிட்ட ஏதேனும் ஒரு மொழி இருந்தாலும் பள்ளி அளவில் ஹிந்திதான் கற்பிக்கப்படும் என்ற நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில், சிபிஎஸ்இ கல்வி வாரியத்தின் கல்வி இயக்குநா் பிரக்யா எம். சிங், சிபிஎஸ்இ அனைத்துப் பள்ளிகளின் முதல்வா்களுக்கும் கடந்த 9-ஆம் தேதி சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளாா். அதில் மும்மொழிக் கொள்கையை இதுவரை அமல்படுத்தாத பள்ளிகள் அனைத்தும் 7 நாள்களுக்குள் இதை அமல்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளாா்.

இந்தச் சுற்றறிக்கையைச் சுட்டிக் காட்டி, புதுச்சேரி அரசு பள்ளிகளின் முதல்வா்கள், பெற்றோருக்குத் தகவல் அனுப்பியுள்ளனா். அதில் 2026-2027 ஆம் கல்வியாண்டில் 5- ஆம் வகுப்பிலிருந்து இரண்டாவது மொழியாக தமிழ் அல்லது ஹிந்தி மொழியை மட்டும் அளிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள பள்ளிகளுக்கு ஏப். 27-ஆம் தேதி முதல், மே 31-ஆம் தேதி வரை கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது. ஜூன் முதல் தேதி மீண்டும் பள்ளிகள் திறக்கப்படுகின்றன.

# சுவிஸ் ஏர்வேஸ் விமானத்தின் இன்ஜின் தீப்பிடித்து 6 பேர் காயம்

**புதுடெல்லி, ஏப்.28:**

டெல்லி விமான நிலையத்தில் இருந்து சுவிஸ் ஏர்வேஸ் விமானம் புறப்பட முயன்ற போது, அதன் இன்ஜின் தீப்பிடித்ததில் 6 பயணிகள் காயமடைந்தனர்.

டெல்லி விமான நிலையத்தில் இருந்து சுவிஸ் ஏர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான ஏர்பஸ் ஏ330 ரக விமானம், நேற்று அதிகாலை சுவிட்சர்லாந்தின் சூரிச் நகருக்கு புறப்படத் தயாரானது. ஓடுதளத்தில் வேகமாகச் செல்லத் தொடங்கிய போது, அந்த விமானத்தின் ஒரு இன்ஜின் செயலிழந்து தீப்பிடித்தது.

இதுகுறித்து சுவிஸ் ஏர்வேஸ் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: டெல்லியில் இருந்து சூரிச் நகருக்கு புறப்படத் தயாரான விமானத்தில் 228 பயணிகள் மற்றும் 4 குழந்தைகள் இருந்தனர். இந்திய நேரப்படி அதிகாலை 1 மணிக்கு மேல், விமானம் கிளம்ப முயன்ற போது இன்ஜினில் சிக்கல் ஏற்பட்டது. இதை அறிந்த விமான ஊழியர்கள் உடனடியாக விமானத்தை நிறுத்தினர். பின்னர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமானத்தில் இருந்த அனைத்து பயணிகளும் அவசர கால சறுக்குப் பாதைகள் மூலம் ஓடுதளத்திலேயே வெளியேற்பட்டனர். இதில் காயமடைந்த 6 பயணிகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஊழியர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகம், மேகாலயத்தில் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்த திட்டம்: மத்திய அரசு அறிமுகம்

**புதுடெல்லி, ஏப்.28:**

தமிழகம் மற்றும் மேகாலத்தில் அடிப்படைநிலை பல்லுயிர் மேலாண்மையை வலுப்படுத்தும் வகையில் 5 ஆண்டு கால திட்டத்தை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் தேசிய பல்லுயிர் ஆணையம் ஆகியவை இணைந்து அறிமுகம் செய்துள்ளன.

இது குறித்து மத்திய சுற்றுச்சூழல் அமைச்சக அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது: பல்லுயிர் பெருக்கத்தை வலுப்படுத்தும் நோக்கில் இந்த 5 ஆண்டு கால திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களை பசுமையாக்குதல், நிதி ஒதுக்கீடுகள் மூலம் உள்ளூர் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அதிகாரமளித்து இத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஊராட்சி (பஞ்சாயத்து) அமைப்புகள் மற்றும் பல்லுயிர் மேலாண்மைக் குழுக்களை வலுப்படுத்துவதற்காக, உள்ளூர் வளர்ச்சித் திட்டங்களில் பல்லுயிர் பெருக்க நடவடிக்கைகளையும் இணைப்பதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். வனத்துறை, வருவாய்த் துறை அதிகாரிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளிட்டோரை ஒன்றிணைத்து இத் திட்டம் செயல்படுத்தப்படும். பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்பு (சிஎஸ்ஆர்) மற்றும் நிலையான வாழ்வாதாரங்களை உருவாக்கும் பசுமை குறுந் தொழில்கள் ஆகிவற்றை செயல்படுத்தி நிதி வழிமுறைகளை ஊக்குவிப்பதும் இத் திட்டத்தின் நோக்கமாகும். மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள் சங்கமிக்கும் தமிழகத்தின் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்திலும், மேகாலயத்தின் காரோ மலைகளிலும் இத் திட்டம் தொடங்கப்பட உள்ளது.

மத்திய அரசு, உலகளாவிய சுற்றுச்சூழல் அமைப்பு, ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென 2025-2030 கால கட்டத்துக்கு ரூ. 46 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

# மேற்கு வங்கம்: திரிணமூல் தொண்டர் வீட்டில் 73 நாட்டு வெடிகுண்டுகள் பறிமுதல்! என்ஐஏ விசாரணை!!

**புதுடெல்லி, ஏப்.28:**

மேற்கு வங்க மாநிலம் தெற்கு 24 பர்கானா மாவட்டத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தொண்டர் என்று கூறப்படும் நபரின் வீட்டில் இருந்து 73 நாட்டு வெடிகுண்டுகளை காவல் துறை ஞாயிற்றுக்கிழமை பறிமுதல் செய்தது.

இதையடுத்து, இந்தக் குண்டுகள் பதுக்கிவைக்கப்பட்டிருந்தது குறித்து மத்திய உள்துறை அமைச்சகத்தின் உத்தரவின்பேரில் என்ஐஏ வழக்குப் பதிந்து விசாரணையைத் தொடங்கியுள்ளது.

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலின் முதல்கட்டம் ஏப்.23-ஆம் தேதி நடைபெற்ற நிலையில், ஏப்.29-ஆம் தேதி 2-ஆம் கட்டம் நடைபெற உள்ளது.

இரண்டாம் கட்டத்தில் தெற்கு 24 பர்கானா மாவட்டத்தில் உள்ள பாங்கர் தொகுதியிலும் வாக்குப் பதிவு நடைபெற உள்ளது. இந்தத் தொகுதியில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தொண்டர் என்று கருதப்படும் ரஃபிகுல் இஸ்லாம் என்ற நபரின் இல்லத்தில் இருந்து 73 நாட்டு வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த சம்பவம் குறித்து தேர்தல் ஆணைய அதிகாரி ஒருவர் பிடிஐ செய்தி நிறுவனத்திடம் கூறியதாவது: தேர்தலையொட்டி நாட்டு வெடிகுண்டுகள் உள்பட பிற வெடிபொருள்கள் ஏதேனும் கண்டறியப்பட்டாலோ அல்லது அவரவர் காவல் எல்லைக்குள் அச்சுறுத்தும் தந்திரங்கள் கையாளப்பட்டாலோ சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல் துறை ஆய்வாளர் முதல் கொல்கத்தா காவல் துறை ஆணையர் வரை, அனைத்து நிலைகளிலும் உள்ள காவல் துறை அதிகாரிகளுக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

வாக்காளர்களுக்கு மிரட்டல்: இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெற உள்ள வேளையில், அந்த மாநிலத்தின் டைமண்ட் ஹார்பர் தொகுதியில் இருசக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் பொதுமக்களை மிரட்டும் காட்சிகள் சமூக ஊடகத்தில் வெளியாகின.

இதுகுறித்து காவல் துறையிடம் தேர்தல் ஆணையம் புகார் அளித்தது. அதன் அடிப்படையில், காவல் துறை வழக்குப் பதிவு செய்து விசாரணையை தொடங்கியுள்ளது.

# உத்தவ் சிவசேனா எம்.பி.க்கள் அதிருப்தி: பாஜக தலைவர்களை சந்தித்ததால் பரபரப்பு

**மும்பை, ஏப்.28:**

மகாராஷ்டிர மாநிலத்தில் சிவசேனா கட்சி 4 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாக உடைந்து, ஏக்நாத் ஷிண்டே தலைமையில் ஓர் அணியாகவும், உத்தவ் தாக்கரே தலைமையில் ஓர் அணியாகவும் பிரிந்தது. தற்போது சிவசேனாவில் (உத்தவ் அணி) நடைபெறும் சம்பவங்கள் கட்சிக்குள் மற்றொரு பிளவை ஏற்படுத்துமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மும்பையில் உள்ள உத்தவ் தாக்கரேவின் வீட்டில் சமீபத்தில் கட்சியின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் மராத்வாடா மக்களவை தொகுதி எம்.பி. சஞ்சய் ஜாதவ் பங்கேற்கவில்லை. சேனா பவனில் நடைபெற்ற கட்சி நிர்வாகிகள் கூட்டத்தையும் அவர் புறக்கணித்தார். அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை எனவும் கூறப்படுகிறது. சிவசேனா உத்தவ் அணியில் உள்ள எம்.பி.க்கள் சிலர் கடந்த சில மாதங்களாகவே அதிருப்தியில் இருப்பதாக கூறப்படுகிறது. உள்ளாட்சித் தேர்தல் பிரச்சாரத்தில் கட்சித் தலைமையின் ஈடுபாடு குறைவாக இருந்ததே, தோல்விகளுக்கு காரணம் என கூறப்படுகிறது. அரவிந்த் சாவந்த் மற்றும் அனில் தேசாய் போன்ற தலைவர்களைத் தவிர, மற்ற எம்.பி-க்கள் கட்சி மாறலாம் என கூறப்படுகிறது.

ஹிங்கோலி எம்.பி. நாகேஷ் பாட்டில் அஷ்டிகர் மற்றும் யவத்மால்- வாஷிம் எம்.பி. சஞ்சய் தேஷ்முக் ஆகியோர் டெல்லியில் மத்திய அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் சமீபத்தில் அளித்த இரவு விருந்தில் கலந்து கொண்டனர்.

அதன்பின் சஞ்சய் ஜாதவ் எம்.பி. டெல்லியில் அமைச்சர் அமித் ஷாவைச் சந்தித்து பேசியுள்ளார்.

# இளநிலை நீட் தேர்வு: இணையத்தில் ஹால் டிக்கெட் வெளியீடு!

**புதுடெல்லி, ஏப்.28:**

இளநிலை நீட் தேர்வுக்கான ஹால் டிக்கெட் திங்கள்கிழமை இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகள், சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் ஆகியவை நீட் தேர்வு மூலம் நிரப்பப்படுகின்றன. அதேபோல, ராணுவக் கல்லூரிகளில் பிஎஸ்சி நர்சிங் படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கு நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்தேர்வை தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

அதன்படி, நிகழ் கல்வியாண்டுக்கான நீட் தேர்வு நாடு முழுவதும் வரும் மே 3-ஆம் தேதி பிற்பகல் 2 முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது. நாடு முழுவதும் 552 நகரங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருச்சி, மதுரை, கோவை உள்பட 30 நகரங்களிலும், துபை, அபுதாபி, தோஹா, மஸ்கட், ரியாத், சிங்கப்பூர் உள்ளிட்ட 16 இடங்களில் தேர்வு நடைபெறுகிறது. இந்த தேர்வுக்கான விண்ணப்ப நடைமுறைகள் கடந்த பிப்ரவரி 8-ஆம் தேதி HTTPS://NEET.NTA.NIC.IN இணையதளத்தில் தொடங்கி மார்ச் 11-ஆம் தேதி வரை நடைபெற்றது.

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வுக்கு இதுவரை இல்லாத வகையில் 26 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்பித்தவர்களுக்கான தேர்வு மையம், ஹால் டிக்கெட் திங்கள்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. இணையதளத்தில் இருந்து அதைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நீட் தேர்வு தமிழ், ஆங்கிலம், ஹிந்தி உள்பட 13 மொழிகளில் நடைபெற உள்ளது. மொத்தம் 180 கேள்விகள் கேட்கப்படும். ஒவ்வொரு கேள்விக்கும் தலா 4 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 720 மதிப்பெண்களுக்கு தேர்வு நடைபெறும். தவறான பதிலுக்கு 1 மதிப்பெண் குறைக்கப்படும்.

# ஆம் ஆத்மியில் இருந்து எம்.பி., எம்எல்ஏ.க்கள் விலகும் அபாயம்

**புதுடெல்லி, ஏப்.28:**

ஆம் ஆத்மி கட்சியின் மக்களவை உறுப்பினர்களுடன் பஞ்சாபின் ஆளும் கட்சி எம்எல் -ஏக்களும் கட்சி தாவும் அபாயம் உருவாகிவருகிறது. இது, ராகவ் சத்தா தலைமையில் ஆம் ஆத்மி கட்சி எம்.பி.க்கள் பாஜகவில் இணைந்ததன் தாக்கமாகக் கருதப்படுகிறது.

டெல்லி முன்னாள் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சிக்கு நாடாளுமன்ற மாநிலங்களவையில் 10 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் ஏழு பேர் கட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்ய ஒருங்கிணைந்தனர். ராகவ் சத்தா, சந்தீப் பதக், ஸ்வாதி மாலிவால், அசோக் மிட்டல் உள்ளிட்ட இந்த 7 பேரும் பாஜகவில் இணைந்தனர். இந்தக் கிளர்ச்சியின் தாக்கம் மக்களவை மற்றும் பஞ்சாப் சட்டபேரவையிலும் ஆம் ஆத்மிக்கு எதிராக குரல் ஒலிக்கும் சூழல் உருவாகி வருகிறது.

மக்களவையில் ஆம் ஆத்மிக்கு 3 உறுப்பினர்கள் உள்ளனர். பஞ்சாபில் முதல்வர் பகவந்த் மான் தலைமையிலான அரசில் 92 எம்எல்ஏக்கள் உள்ளனர். இவர்களிலும் பலர் ஆம் ஆத்மியை விட்டு விலகும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, இவர்கள் அனைவரையும் கட்சியில் தக்க வைப்பது ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கேஜ்ரிவாலுக்கு பெரும் சவாலாகிவிட்டது. இதனால் ஆம் ஆத்மி கட்சியின் எதிர்காலம் தற்போது பெரும்கேள்விக்குறியாகிவருகிறது. பஞ்சாப் ஆம் ஆத்மி எம்எல்ஏக்களில் ராஜ்குமார் சப்பேவால் (ஹோஷியார்பூர்), குர்மீத் சிங் ஹேயர் (சங்ரூர்), மல்விந்தர் சிங் காங் (அனந்த்பூர் சாஹிப்) ஆகியோர் கட்சி தாவும் பட்டியலில் முன்னணியில் உள்ளனர். வரும் சில மாதங்களில், இவர்கள் பாஜகவில் இணையலாம் என கூறப்படுகிறது.

இது குறித்து பாஜகவின் தேசியப் பொதுச் செயலாளர் தருண் சுக் கூறுகையில், "ஆம் ஆத்மி கட்சி தனது அடிப்படை கொள்கைகளில் இருந்து விலகிவிட்டது. இதனால், அதன் தலைவர்கள் ஒவ்வொருவராக தற்போது கட்சியிலிருந்து வெளியேற விரும்புகின்றனர்" என்றார். கடந்த 2022 தேர்தலில், பஞ்சாப் சட்டப்பேரவையின் 117 இடங்களில் 92 இடங்களை கைப்பற்றி ஆம் ஆத்மி கட்சி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது. இந்த நிலையில், மாநிலங்களவை எம்பிக்கள் 7 பேர் ஆம் ஆத்மியை விட்டு விலகி பாஜகவில் இணைந்துள்ளனர். இவர்களில் ராகவ் சத்தாவும் சந்தீப் மிட்டலும் பஞ்சாபில் ஆம் ஆத்மி கட்சியின் வரலாற்று வெற்றியின் சிற்பிகளாக திகழ்ந்தனர். பஞ்சாபில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. இத்தகைய சூழலில், ஆம் ஆத்மி கட்சி பஞ்சாபில் தனது இருப்பை தக்கவைத்துக் கொள்வது எளிதாக இருக்காது எனத் தெரிகிறது. இது உடனடியாக இல்லாவிட்டாலும், குறைந்தது அடுத்த சில மாதங்களில் அர்விந்த் கேஜ்ரிவாலுக்கு ஒரு சவாலாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## கஞ்சா பங்கிடுவதில் வாக்குவாதம்: புழல் சிறையில் கைதிகளுக்கு இடையே மோதல்




**செங்குன்றம், ஏப்.28:** சென்னை, புழல் மத்திய சிறையில் கஞ்சா பங்கிடுவது தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி, கைதிகளுக்கு இடையே மோதலாக வெடித்தது. இதுதொடர்பாக கைதிகள் 12 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சென்னை, புழல் மத்திய சிறையில் தண்டனை, விசாரணை, மகளிர் என, 3 பிரிவுகளில் சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். சிறையினுள், தடையை மீறி கஞ்சா, மொபைல் போன் உள்ளிட்டவை பயன்படுத்தப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், புழல் மத்திய சிறையின் விசாரணை பிரிவில் நேற்று முன் தினம், கைதிகளில் ஒரு தரப்பினர் கஞ்சா வைத்திருந்துள்ளனர். இதையறிந்த மற்றொரு தரப்பினர் அவர்களிடம் கஞ்சா கேட்டதாக கூறப்படுகிறது.

அப்போது, கஞ்சாவை கொடுக்க மறுத்ததால், அவர்களுடன் எதிர்தரப்பினர் வாக்குவாதம் செய்தனர். அந்த வாக்குவாதம் முற்றி, இருதரப்பு கைதிகளுக்கிடையே மோதலாக வெடித்தது. இதனையறிந்த சிறை காவலர்கள் இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தி, அவரவர் அறைகளுக்கு கொண்டு சென்று அடைத்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக சிறை அதிகாரிகள், புழல் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் நடத்திய முதல் கட்ட விசாரணையின் அடிப்படையில், இருதரப்பு விசாரணை கைதிகளான ஆனந்த், சின்னத்தம்பி, ராஜேஷ், நரசிம்மன், சக்திவேல், விஜய், கணேஷ்குமார், சூர்யா, நித்தியவேல், விக்னேஷ், கேசவன், விக்னேஷ் ஆகிய 12 பேர் மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்து, தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், போலீஸார் தடை செய்யப்பட்ட கஞ்சா சிறைக்குள் வந்தது எப்படி? என பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஒசூரில் உதவி செய்வது போல் நடித்து இளம்பெண்ணை கடத்தி பாலியல் பலாத்காரம்: பால் வியாபாரி கைது

**ஒசூர், ஏப்.28:** பீகார் மாநிலத்தைச் சேர்ந்த 30 வயது மதிக்கத்தக்க திருமணமான பெண் ஒருவர், கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு வேலை தேடி, கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூருக்கு வந்துள்ளார். அங்குள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்த அவர், தற்காலிகமாக தங்கி பணியாற்றி வந்தார். கடந்த 2 நாட்களுக்கு முன்னர், அப்பெண் தன்னுடன் தங்கியுள்ளவர்களைத் தொடர்பு கொள்ள முயன்றுள்ளார். ஆனால், அவரிடம் போன் இல்லாததால், பேகேப்பள்ளி மகாலட்சுமி லே-அவுட்டைச் சேர்ந்த பால் வியாபாரி மகேஷ் (37) என்பவரிடம் போன் கேட்டுள்ளார்.

அப்போது, யாருக்கு போன் செய்ய வேண்டும் என்று விசாரித்த மகேஷ், அப்பெண்ணை அவர்களிடம் தானே நேரில் அழைத்துச் சென்று விடுவதாக கூறி டூவீலரில் ஏற்றிச் சென்றார். மகேஷை நம்பி உடன் சென்ற அப்பெண்ணை, அவர் செல்ல வேண்டிய இடத்திற்கு அழைத்துச் செல்லாமல், ஜூஜூவாடி உப்கார் ராயல் கார்டன் லே-அவுட் பகுதியில் உள்ள ஆள் நடமாட்டமில்லாத பகுதிக்கு மகேஷ் கடத்திச் சென்றார்.

பின்னர், அப்பெண்ணை கட்டாயப்படுத்தி பாலியல் பலாத்காரம் செய்துவிட்டு, அங்கிருந்து தப்பியோடி விட்டார். பாதிக்கப்பட்ட பெண், ஒசூர் அனைத்து மகளிர் போலீசில் இது குறித்து புகார் அளித்தார். இதன் பேரில், வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தினர். இந்நிலையில், தலைமறைவாக இருந்த மகேஷை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சென்னை: ரூ.14 லட்சத்தை போலீஸ் பறித்ததாக பொய் கூறி பணத்தை திருடிய ஊழியர் கைது

**சென்னை, ஏப்.28:** வேலூர் மாவட்டம் குடியாத்தத்தைச் சேர்ந்த தன்வீர் அகமது (37), சென்னை பெரியமேட்டில் அலுமினிய ஸ்கிராப் தொழில் செய்து வருகிறார். இவரது கடையில் அதே ஊரைச் சேர்ந்த முகமது தன்ஜீர் (25) என்பவர் கடந்த 6 மாதங்களாக வேலை பார்த்து வந்தார்.

கடந்த 24-ம் தேதி, கோயம்பேட்டில் உள்ள ஒரு செல்போன் கடையில் ரூ.14 லட்சம் பணத்தைப் பெற்றுக்கொண்டு, அதனை வானகரத்தில் உள்ள ஒரு நிறுவனத்தில் ஒப்படைக்குமாறு தன்ஜீரை உரிமையாளர் தன்வீர் அகமது அனுப்பிவைத்துள்ளார்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட தன்ஜீர், நீண்ட நேரமாகியும் அதை ஒப்படைக்கவில்லை. இதுகுறித்து உரிமையாளர் கேட்டபோது, "நான் ஆட்டோவில் வந்தபோது நெற்குன்றம் அருகே போக்குவரத்து போலீஸார் வழிமறித்து ரூ.14 லட்சத்தையும், எனது செல்போனையும் பிடுங்கிக்கொண்டனர்.

பிறகு என்னை மதுரவாயல் பைபாஸில் இறக்கிவிட்டு, பணத்தைக் காவல் நிலையத்தில் வந்து வாங்கிக்கொள்ளுமாறு கூறிச் சென்றுவிட்டனர்" எனப் பதற்றத்துடன் கூறியுள்ளார்.

தன்வீர் அகமது உடனடியாக கோயம்பேடு காவல் நிலையத்துக்குச் சென்று இதுகுறித்து விசாரித்தார். அப்போது, குறிப்பிட்ட நேரத்தில் அந்தப் பகுதியில் போலீஸார் யாரும் சோதனையில் ஈடுபடவில்லை என்பதும், அதுபோன்ற பறிமுதல் நடவடிக்கை எதுவும் நடக்கவில்லை என்பதும் தெரியவந்தது.

இதனால் சந்தேகமடைந்த போலீஸார், தன்வீர் அகமது அளித்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்து விசாரணையைத் தொடங்கினர். சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் பகுதியில் இருந்த சிசிடிவி காட்சிகளை போலீஸார் ஆய்வு செய்தபோது, போலீஸார் மறித்ததாகக் கூறப்படும் தகவல் முற்றிலும் பொய் என்பது உறுதியானது.

இதையடுத்து, முகமது தன்ஜீரிடம் போலீஸார் தங்களது பாணியில் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். முதலில் மழுப்பிய தன்ஜீர், பின்னர் போலீஸாரின் தீவிர விசாரணையில் தான் ஆடிய நாடகத்தை ஒப்புக்கொண்டார்.

தன்ஜீர் திருடிய ரூ.14 லட்சத்தையும் பொன்னேரியில் உள்ள ஒரு வீட்டில் ரகசியமாக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

உடனடியாக விரைந்து சென்ற போலீஸார், மறைத்து வைக்கப்பட்டிருந்த பணத்தை மீட்டனர். தொடர்ந்து முகமது தன்ஜீரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## திருத்தணியில் சித்திரை பெருவிழா; புலி, யானை வாகனத்தில் முருகன் வீதியுலா: திரளான பக்தர்கள் தரிசனம்

**சென்னை, ஏப்.28:** திருத்தணி முருகன் கோயிலில் சித்திரை பெருவிழாவையொட்டி உற்சவர் புலி மற்றும் யானை வாகனத்தில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். முருகப்பெருமானின் ஐந்தாம் படை வீடாக சிறந்து விளங்கும் திருத்தணி முருகன் கோயிலில், சித்திரை பெருவிழா தொடங்கி விமரிசையாக நடந்து வருகிறது. பள்ளிகளுக்கு கோடை விடுமுறை மற்றும் வார விடுமுறை நாளான நேற்று முருகன் கோயிலில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. அதிகாலை மூலவருக்கு பஞ்சாமிர்த அபிஷேக பூஜைகளை தொடர்ந்து தங்க கவசம் அலங்காரத்தில் முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.



தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் வாகனங்கள் மற்றும் படிகள் வழியாக மலைக் கோயிலுக்கு வந்தடைந்தனர். பொது வழியில் மற்றும் ரூ.100 சிறப்பு கட்டண வழியில் பக்தர்கள் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். சித்திரை பெருவிழாவில் நேற்று மாலை முருகப்பெருமான் புலி வாகனத்தில் கோயில் மாட வீதியுலா நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வழிபட்டனர். தொடர்ந்து இரவு யானை வாகனத்தில் உற்சவர் வீதி உலா நடந்தது. பக்தர்கள் வசதிக்காக கோயில் நிர்வாகம் சார்பில் நீர், மோர், பிரசாதம் வழங்கப்பட்டது.

## மெரினாவில் கார் தீப்பற்றி எரிந்ததால் பரபரப்பு



**சென்னை, ஏப்.28:** மெரினா கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த கார் தீப்பற்றி எரிந்த சம்பவம், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சென்னையில் மென்பொறியாளராகப் பணிபுரிந்து வரும் ஸ்ரீநாத் என்பவர், நேற்று அதிகாலை சூரிய உதயத்தைக் காண்பதற்காகத் தனது காரில் மெரினா கடற்கரைக்கு வந்தார்.

மெரினா சர்வீஸ் சாலையில் காரை நிறுத்திவிட்டு கடற்கரைக்குச் சென்றார். சிறிது நேரம் கழித்து அவர் மீண்டும் காரை நோக்கி வந்தபோது, எதிர்பாராத விதமாக கார் திடீரெனத் தீப்பற்றி எரியத் தொடங்கியது.

கண்ணிமைக்கும் நேரத்தில் தீ காரின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவியதால், அந்த இடமே கரும்புகை மண்டலமாகக் காட்சியளித்தது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அங்கிருந்த பொது மக்களும், நடைப்பயிற்சி மேற்கொண்டவர்களும் உடனடியாக காவல் துறையினருக்கும், தீயணைப்புத் துறைக்கும் தகவல் அளித்தனர்.

தகவலின் பேரில், திருவல்லிக்கேணி தீயணைப்பு நிலைய வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து, தீயை அணைத்தனர். எனினும், இந்த விபத்தில் கார் முற்றிலும் எரிந்து எலும்புக்கூடாக மாறியது.

அதிர்ஷ்டவசமாக கார் நிறுத்தப்பட்டிருந்த போது தீ விபத்து ஏற்பட்டதால் பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது. காரில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாகத் தீ விபத்து ஏற்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பது குறித்துக் காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சென்னையில் ஆட்டோ எல்பிஜி எரிவாயு தட்டுப்பாடு: 3 மணி நேரம் காத்திருக்கும் ஓட்டுநர்கள்

**சென்னை, ஏப்.28:** சென்னையில் ஆட்டோ எல்பிஜி எரிவாயு கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஓட்டுநர்கள் 3 மணி நேரம் வரை வரிசையில் காத்திருந்து, நிரப்பி செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.



மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றத்தால், காஸ் சிலிண்டர், ஆட்டோ எல்பிஜி எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதை சமாளிக்க மாற்று வழிகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. இதற்கிடையில், வாகனங்களுக்கான எல்பிஜி, சிஎன்ஜி எரிவாயு கிடைக்காததால், ஓட்டுநர்கள் கடும் சிரமத்தை சந்திக்கின்றனர்.

சென்னை நகரில் பல்லாயிரக்கணக்கான ஆட்டோக்கள், கால் டாக்சிகள் எல்பிஜி மற்றும் சிஎன்ஜி எரிவாயுவை பயன்படுத்துகின்றன. தற்போது எல்பிஜி எரிவாயு தட்டுப்பாட்டால், பல்வேறு தனியார் ஆட்டோ எரிவாயு நிலையங்களில் மூடப்பட்டுள்ளன.

சைதாப்பேட்டை, கிண்டி. சிஐடி நகர் உள்பட சில இடங்களில் திறக்கப்பட்டுள்ள எரிவாயு நிரப்பும் நிலையங்களில் நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருந்து நிரப்பி செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

உதாரணமாக, சிஐடி நகரில் 2 கி.மீ. தூரத்துக்கு 3 மணி நேரமாக நீண்ட வரிசையில் காத்திருந்து, காஸை நிரப்பி செல்லும் பரிதாப நிலைக்கு ஆட்டோ ஓட்டுநர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

சென்னையில் ஆட்டோ, கார் ஆகியவற்றுக்கு நிரப்பப்படும் காஸ் நிரப்பும் நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால், ஆட்டோ ஓட்டுநர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளன. இது குறித்து, ஆட்டோ ஓட்டுநர்கள் கூறுகையில், "ஏற்கனவே ஆட்டோ எரிவாயு தட்டுப்பாட்டால், ஓட்டுநர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது, பெரும்பாலான நிலையங்களில் எல்பிஜி எரிவாயு கிடைக்காததால், ஓட்டுநர்களுக்கு மன உளைச்சல் ஏற்பட்டு, உடல்நலக் குறைவு ஏற்படுகிறது. இப்பிரச்சினைக்கு மத்திய அரசு தீர்வு காண வேண்டும்" என்றனர்.

இது குறித்து, இந்திய எண்ணெய் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: இந்திய எண்ணெய் நிறுவனங்களில் போதுமான அளவு எரிவாயு கையிருப்பு உள்ளது. எண்ணெய் நிறுவனங்களின் கீழ் செயல்படும் எரிவாயு நிரப்பும் மையங்களுக்கும் போதுமான அளவு காஸ் வழங்கப்படுகிறது.

வாகன ஓட்டிகள் தங்களுக்குரிய வாகனங்களில் போதுமான அளவு காஸ் நிரப்பி கொள்ளலாம். ஆட்டோக்கள் நீண்ட வரிசையில் காத்துக்கிடப்பதற்கு காரணம் பல தனியார் காஸ் நிரப்பும் நிலையங்களில், எரிவாயு இல்லாமல் இருப்பதுதான்.

அத்துடன், காஸ் தட்டுப்பாடு காரணமாக, ஒருசில காஸ் நிரப்பும் மையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

இதனால், ஒட்டுமொத்தமாக அனைவரும் இந்திய எண்ணெய் நிறுவனங்கள் நடத்தும் மையங்களை தேடி ஒரே நேரத்தில் செல்வதால், நீண்ட வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## 'சென்னை ஒன்' செயலி மூலம் வெளியூர் பஸ் டிக்கெட் பெறும் வசதி

### போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தகவல்

Chennai One

**சென்னை, ஏப்.28:** வெளியூர் பேருந்துகளுக்கான டிக்கெட்டுகளை 'சென்னை ஒன்' செயலியில் பெறும் வசதி விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில் போக்குவரத்து சேவைகளை ஒருங்கிணைப்பதற்காக, சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் (கும்டா) ஏற்படுத்தப்பட்டது. இந்த குழுமம் வாயிலாக 'சென்னை ஒன்' என்ற செயலி உருவாக்கப்பட்டு கடந்த செப்.22-ம் தேதிமுதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த செயலி வாயிலாக மெட்ரோ ரயில், மின்சார ரயில், மாநகரப் பேருந்துகளில் பயணிப்பதற்கான டிக்கெட்டுகளை க்யூஆர் குறியீடு வழியாக பெறலாம். இந்த 3 சேவைகளுக்கும் சேர்த்து அல்லது தனித் தனியாகவும் மக்கள் இந்த செயலியில் டிக்கெட் பெற முடியும்.

இந்த செயலியை 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர். இச்செயலி மூலம் மாநகரப் பேருந்துகளில் ரூ.1,000, ரூ.2,000-க்கான மாதாந்திர பேருந்து பயண அட்டைகளை, 'டிஜிட்டல்' வடிவில் பெறும் வசதி உள்ள நிலையில், மெட்ரோரயில், மின்சார ரயில் ஆகியவற்றுக்கான மாதாந்திர பயணச் சீட்டுகளை, இந்த செயலியில் பெற வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில், அரசு விரைவு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்ட அரசு போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றின் பேருந்துகளில் பயணிக்க, சென்னை ஒன் செயலியில் டிக்கெட் எடுக்கும் வசதியை விரைவில் அறிமுகப்படுத்த போக்குவரத்துத் துறை திட்டமிட்டுள்ளது.


இதற்கான புதிய மென்பொருள் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெளியூர் பேருந்துகளில் ஜிபிஎஸ் வசதியை ஏற்படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் புதிய மென்பொருள் தயாரிக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

## தருவைகுளம் அருகே 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கடல்சார் புதை படிமங்கள் கண்டுபிடிப்பு

**கோவில்பட்டி, ஏப்.28:** தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளம் அருகே கண்டெடுக்கப்பட்ட கடல்சார் புதை படிமங்கள் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என இந்திய விலங்கியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



மேலும் கீழக்கரை முதல் திருச்செந்தூர் வரையிலான கடற்கரை மண்டலத்தை 'பண்டைய கடல்சார் பாரம்பரிய மண்டலமாக' அறிவிக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

தருவைகுளம் அருகே பட்டினமருதூர், பனையூர் பகுதிகளில் பழமை வாய்ந்த செவ்வக வடிவிலான கிணறு, முதுமக்கள் தாழி, பழமையான ஓடுகள், இரும்புகள், பழங்கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.

இப்பகுதிகளில் நீர் மற்றும் நிலப்பரப்புக்கு கீழ் புதையல் மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் படிமங்கள் இருப்பதால் இந்திய விலங்கியல் மற்றும் புவியியல் துறை ஆய்வு நடத்த வேண்டும் என கோரிக்கை எழுந்தது.

இந்நிலையில், மத்திய விலங்கியல் ஆய்வு மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கடந்த ஜனவரி மாதம் பனையூர் பகுதியில் சுமார் 2 கி.மீ. தூரம் ஆய்வு செய்தனர்.

அப்போது சிறிய அளவிலான சிப்பிகள் உள்ளிட்டவற்றை சேகரித்து ஆய்வுக்கு கொண்டு சென்றனர்.

இதுதொடர்பாக இந்திய விலங்கியல் ஆய்வு மையம் தற்போது அறிக்கை வெளியிட்டுள் ளது. அதில், பனையூர் கடற்கரை பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கடல்சார் புதைபடிமங்கள் 8 ஆயிரம் முதல் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தூத்துக்குடியைச் சேர்ந்த வரலாறு மற்றும் தொல்லியல் ஆர்வலர் பெ.ராஜேஷ் செல்வரதி கூறியதாவது: பனையூரில் கண்டெடுக்கப்பட்ட சிப்பிகள் *(Magallana)* மற்றும் கிளிஞ்சல்கள் *(Meretrix casta)* போன்ற சிற்றினங்கள், அலைகளின் வேகம் குறைவாக உள்ள அமைதியான கடல் அல்லது முகத்துவாரச் சூழலில் மட்டுமே செழிக்க கூடியவை.

பனையூரில் தற்போதைய கடற்கரையிலிருந்து 5 முதல் 7 கி.மீ. உள்நோக்கி இந்த புதை படிமங்கள் கண்டறியப்பட்டிருப்பது, ஹோலோசீன் காலத்தில் கடல் மட்டம் உயர்ந்து ஆழமான வளைகுடாக்களை உருவாக்கி இருந்ததை நிரூபிக்கிறது.

இந்த படுக்கைகளில் சிப்பிகள், கிளிஞ்சல்கள் போன்ற 100-க்கும் மேற்பட்ட மாதிரிகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பனையூர் புதைபடிவப் படுக்கைகள் வெறும் ஓடுகளின் தொகுப்பு மட்டுமல்ல. அவை, சுமார் 8,000 முதல் 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஹோலோசீன் ஊழிக் காலத்தின் உயர்தர உயிரியல் ஆவணம் ஆகும் என விலங்கியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது பாண்டிய வம்சத்தின் வரலாறு மற்றும் மறைந்த நகரங்களான கபாடபுரம், தென்மதுரையை ஆய்வு செய்பவர்களுக்கு, இலக்கியங்களில் கூறப்படும் கடல்-கோள் நிகழ்வுகளை உறுதிப்படுத்தும் புவியியல் சான்றாக அமைகிறது. கடந்த பல ஆயிரம் ஆண்டுகளாக இந்த உயிரினங்களின் உருவ அமைப்பில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது.

இது மன்னார் வளைகுடா உலகின் மிக நிலையான கடல் சூழலமைப்புகளில் ஒன்றாக இருந்ததைக் காட்டுகிறது. எனவே, கீழக்கரை முதல் திருச்செந்தூர் வரையிலான இந்த வரலாற்று மற்றும் அறிவியல் சிறப்புமிக்க கடற்கரை மண்டலத்தை 'பண்டைய கடல்சார் பாரம்பரிய மண்டலமாக' அறிவிக்க வேண்டும்.

இந்த பாதுகாக்கப்பட்ட வளைகுடாக்களின் புவியியல் வரலாறு மற்றும் இந்தியாவின் கடல்சார் வளங்களில் அவற்றின் பங்கை விளக்கும் வகையில் தூத்துக்குடியில் தேசிய புவி பூங்கா அமைக்க வேண்டும்.

# விளைச்சல் அதிகரிப்பு எதிரொலி - வாசனை திரவிய ஆலைகளுக்கு செல்லும் மல்லிகை பூக்கள்



**ஈரோடு, ஏப்.28:** ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பவானிசாகர் கொத்தமங்கலம், ராஜன் நகர், புது வடவள்ளி சிக்கரசம்பாளையம், தயிர் பாளையம், இக்கரை தத்தபள்ளி, பகுத்தம்பாளையம், கெஞ்சனூர், தாண்டாம் பாளையம் உள்பட பல்வேறு கிராமங்களில் அதிக அளவில் மல்லிகை செடிகள் பயிரிடப்பட்டுள்ளது.

இங்கு விளையும் பூக்கள் தினமும் அதிகாலையில் பறிக்கப்பட்டு சத்தியமங்கலத்தில் விவசாயிகளால் நடத்தப்படும் பூ மார்க்கெட்டிற்கு கொண்டுவரப்படும். அங்கு ஏல முறையில் விலை நிர்ணயம் செய்து வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஈரோடு, திருப்பூர், கோவை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு நகரங்களுக்கும், கர்நாடகா, கேரளா, ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் மல்லிகை பூக்கள் அதிகளவில் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

தற்போது கோடை காலம் என்பதால் மல்லிகை பூ விளைச்சல் அதிகரித்துள்ளது. மல்லிகைப்பூ விளைச்சல் அதிகரித்துள்ளதால் வெளியூர்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைத்தது போக மீதமுள்ள மல்லிகை பூக்களை வாசனை திரவியம் தயாரிக்கும் ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

நாளொன்றுக்கு 10 முதல் 15 டன் மல்லிகை பூக்கள் விளைச்சல் உள்ளதால் அனுப்பி வைக்கப்படும் 5 டன் பூக்கள் போக மீதி உள்ள 10 டன் பூக்களை வாசனை திரவிய ஆலை நிர்வாகம் கொள்முதல் செய்வதாகவும் வாசனை திரவிய ஆலைகளுக்கு கொண்டு செல்லும் மல்லிகை பூவுக்கு ஒரு கிலோ ரூ. 250 முதல் ரூ.280 வரை கிடைப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# திம்பம் மலை பாதையில் மீண்டும் இரவில் உலா வந்த சிறுத்தை



**ஈரோடு, ஏப்.28:** ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அடுத்த திம்பம் மலைப்பாதை 27 கொண்டை ஊசி வளைவுகளை கொண்டது. தமிழகம்-கர்நாடகாவை இணைக்கும் மிக முக்கிய போக்குவரத்து பகுதியாக திம்பம் மலைப்பாதை உள்ளது. குறிப்பாக 27 கொண்டை ஊசி வளைவுகளை கடந்து செல்வது வாகன ஓட்டிகளுக்கு மிகப் பெரிய சவாலாக இருந்து வருகிறது.

திம்பம் மலைப்பகுதியில் யானை, சிறுத்தை அதிக அளவில் வசித்து வருகின்றன. குறிப்பாக சிறுத்தை இரவு நேரங்களில் சாலையோரம் வருவது தொடர்கதையாகி வருகிறது. இதனால் இந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் கவனத்துடன் செல்லுமாறு வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்து இருந்தனர்.

இந்நிலையில் இரவில் வாகன ஓட்டி ஒருவர் தனது காரில் திம்பம் மலைப்பாதை வழியாக சென்று கொண்டிருந்தார். அப்போது திடீரென வளைவில் திரும்பிய போது ஒரு சிறுத்தை வனப்பகுதியில் இருந்து வெளியேறி சாலையில் நடந்து சென்றது. திடீரென சிறுத்தை நடந்து சென்றதால் காரில் வந்த வாகன ஓட்டி காரை மெதுவாக இயக்கினார்.

அந்த சிறுத்தை எதைப் பற்றியும் அலட்டிக்கொள்ளாமல் சாவகாசமாக திம்பம் மலைப்பாதையில் உள்ள சாலையில் மெதுவாக நடந்து சென்றது. சிறுத்தையை பின்தொடர்ந்து அந்த வாகன ஓட்டியும் தனது காரை மெதுவாக இயக்கினார். அப்போது அந்த வாகன ஓட்டி சிறுத்தை நடமாட்டத்தை தனது செல்போனில் வீடியோவாக பதிவு செய்தார். சிறிது தூரம் நடந்து சென்ற அந்த சிறுத்தை பின்னர் மீண்டும் வனப்பகுதிக்குள் சென்றது.

அதைத்தொடர்ந்து அந்த வாகன ஓட்டி அங்கிருந்து சென்றார். இதைப் போல திம்பம் பகுதியில் மற்றொரு இடத்தில் காரில் சென்று கொண்டிருந்த ஒரு வாகன ஓட்டி தடுப்பு சுவரின் பின்புற பகுதியில் சிறுத்தை ஒன்று படுத்திருந்ததை கண்டார். இதனால் இந்த வாகன ஓட்டி காரின் ஹாரனை அடித்துக் கொண்டிருந்தார்.

இதனால் தடுப்பு சுவரில் படுத்திருந்த சிறுத்தை எழுந்து பார்த்தது. தொடர்ந்து அந்த வாகன ஓட்டி விடாமல் ஹாரனை அடித்துக் கொண்டே இருந்தார். இதனால் அந்த சிறுத்தை எழுந்திருந்து அங்கிருந்து மீண்டும் வனப்பகுதிக்குள் சென்றது.

இந்த காட்சிகள் அனைத்தையும் அந்த வாகன ஓட்டி வீடியோவாக பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருந்தார்.



# பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு 250 கன அடி திறப்பு

**சென்னை, ஏப்.28:** சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.சென்னை மக்களின் குடிநீர் ஆதாரமாக இருப்பது பூண்டி சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கம். இந்த நீர்த்தேக்கம் 35 அடி உயரமும், 3231 மில்லியன் கன அடி கொள்ளளவும் கொண்டதாகும். ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து வரும் கிருஷ்ணா நதிநீர், ஆந்திர மாநிலம் அம்மம்பள்ளி நீர்த்தேக்கத்தில் இருந்து கொசஸ்தலை ஆறு வழியாக வரும் தண்ணீர் மற்றும் பூண்டி நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து வரத்து கால்வாய்கள் மூலம் பெறப்படும் நீர் ஆகியவை முக்கிய நீர் ஆதாரமாக உள்ளன.



தற்போது இந்த நீர்த்தேக்கத்தின் 35 அடி உயரத்தில் நேற்றைய நிலவரப்படி 31.33 அடி உயரம் நீர் நிரம்பியுள்ளது. மொத்த கொள்ளளவான 3231 மில்லியன் கன அடியில் நீர் இருப்பு 2064 மில்லியன் கன அடியாக உள்ளது. இந்நிலையில் நீர்த்தேக்கத்தில் இருந்து சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக இணைப்பு கால்வாய் மூலம் செம்பரம்பாக்கம் ஏரிக்கு தண்ணீர் அனுப்பப்பட்டு வருகிறது.

அதன்படி நேற்றைய நிலவரப்படி இணைப்பு கால்வாய் வழியாக 250 கன அடி வீதம் செம்பரம்பாக்கம் ஏரிக்கும், பேபி கால்வாய் வழியாக 17 கன அடி வீதம் அனுப்பப்பட்டு வருகிறது. இருப்பினும் சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக தொடர்ந்து நீர் அனுப்பப்படும் என்றும், குடிநீர் அனுப்புவதில் பாதிப்பு ஏதும் இருக்காது என்றும் நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தஞ்சாவூர் பெரிய கோயிலில் சித்திரை திருவிழா தேரோட்டம்: ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு

**தஞ்சாவூர், ஏப்.28:** உலக பிரசித்திப் பெற்ற தஞ்சாவூர் பெரிய கோயிலில் சித்திரை திருவிழா தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தேரினை வடம்பிடித்து இழுத்து சுவாமி தரிசனம் செய்தனர். உலக பிரசித்தி பெற்ற கோயில்களில் ஒன்று 'தஞ்சை பெரிய கோயில்' என்றழைக்கப்படும் அருள்மிகு பெரியநாயகி அம்மன் உடனுறை ஸ்ரீபெருவுடையார் திருக்கோயில். கட்டட கலைக்கு எடுத்துக்காட்டாய் திகழும் இக்கோயில் உலக பாரம்பரிய சின்னமாகவும் விளங்குகிறது. இக்கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை திருவிழா வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம்.



அதன்படி இவ்விழா கடந்த ஏப்ரல் 13ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 18 நாட்கள் நடைபெறும் இந்த சித்திரை திருவிழாவில் தினமும் மாலை பல்வேறு வாகனங்களில் சுவாமி புறப்பாடும் நடைபெற்று வருகிறது. இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. முன்னதாக அதிகாலை பெரிய கோயிலிலிருந்து ஸ்ரீவிநாயகர், ஸ்ரீவள்ளி தெய்வானை, ஸ்ரீசுப்ரமணியர், ஸ்ரீசண்டிகேஸ்வரர், ஸ்ரீநிலோதபலாம்பாள், ஸ்ரீதியாகராஜர், ஸ்கந்தர், ஸ்ரீகமலாம்பாள் ஆகிய சுவாமிகள் முத்துமணி அலங்கார சப்பரத்தில் அமர்ந்திருக்க, பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நடைபெற்று மேலவீதி தேரடியை வந்தடைந்தது.

பின்னர் ஸ்ரீதியாகராஜ சுவாமி. கமலாம்பாள் சுவாமிகள் திருத்தேரில் எழுந்தருள, அவர்களுக்கு சிறப்பு தீபாராதனை காட்டப்பட்டு மங்கள் இசைக்கருவிகள் முழங்க தேரோட்டம் விமரிசையாக நடைபெற்றது. தேரினை, தஞ்சாவூர் மாவட்டம் மட்டுமின்றி தமிழகத்தின் பலவேறு பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். தேர் திருவிழாவை முன்னிட்டு நூற்றுக்கணக்கான காவல்துறையினர், தீயணைப்பு துறையினர் மற்றும் மருத்துவத் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மத நல்லிணக்கத்தை போற்றும் வகையில் பாதிரியார்கள், உலமாக்கள், இஸ்லாமிய பெண்கள் பங்கேற்று பொதுமக்களுக்கு எலுமிச்சை ஜூஸ், தண்ணீர், நீர் மோர் ஆகியவற்றை வழங்கினர். தேரோட்டத்தை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

# ஒகேனக்கல், பென்னாகரம் வனத்தில் வறட்சி காட்டை விட்டு வெளியேறும் யானைகளுக்கு குடிநீர் தீர்வு

**தர்மபுரி, ஏப்.28:** தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு, ஒகேனக்கல், பென்னாகரம் வனச்சரகத்தில், கோடை வெயிலால் வனப்பகுதியில் வறட்சி ஏற்பட்டுள்ளது.காட்டை விட்டு வெளியேறும் யானை உள்ளிட்ட வனவிலங்குகளுக்கு, குடிநீர் வழங்கிட தீர்வு ஏற்படுத்த ஆற்றின் கால்வாய்களில் 20 இடத்தில் இயற்கை நீரூற்று அமைக்கப்பட்டுள்ளது.தர்மபுரி



மண்டலத்தில் தர்மபுரி, ஒசூர் வனக்கோட்டங்கள் உள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் 1700 சதுர கி.மீ., வனம் காப்பு காடுகளை கொண்டது.

இந்த மாவட்ட காடுகள் இரண்டு மாநிலங்களான கர்நாடகம், தமிழகம் ஆகியவற்றின் எல்லைகள் சந்திக்கும் பகுதியில் அமைந்துள்ளது. இந்த காடுகள் காவிரி, தென்பெண்ணை ஆறு, சனத்குமார நதி, வாணியாறு, கம்பைநல்லூர் ஆறு ஆகிய ஆறுகளுக்கு நீர் பிடிப்பு பகுதியாக உள்ளன.

# பள்ளி விடுமுறை, கோடை காலம் எதிரொலி ஏலகிரிமலைக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு

**ஜோலார்பேட்டை, ஏப்.28:** கோடை வெயில் சுட்டெரிப்பதால் ஏழைகளின் ஊட்டி ஏலகிரிமலைக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

இதில் விடுமுறை தினமான நேற்று ஏராளமானோர் உற்சாக படகு சவாரி செய்து மகிழ்ந்தனர்.திருப்பத்தூர் மாவட்டம்ஜோலார்பேட்டை அடுத்த ஏலகிரிமலையில் எப்போதும் குளிர்ச்சியான சீதோஷண நிலை நிலவுவதால், ஏழைகளின் ஊட்டியாக விளங்கி வருகிறது.

இதனால் தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். தற்போது கோடைகாலம் தொடங்கியுள்ளதாலும், பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாலும் ஏலகிரிமலைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்க தொடங்கியுள்ளது.

குறிப்பாக ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமான நேற்று சுற்றுலா பயணிகளின் வருகை மேலும் அதிகரித்திருந்தது.

இங்கு உள்ள சிறுவர் பூங்கா, படகு துறை, இயற்கை பூங்கா, முருகன் கோவில் உள்ளிட்ட இடங்களையும், தனியார் பொழுதுபோக்கு கூடங்களிலும் பயணிகள் கூட்டம் கூட்டமாக பல்வேறு சாகச விளையாட்டுகளையும் விளையாடி மகிழ்ந்தனர்.

மேலும் விடுமுறை என்பதால் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு இடங்களில் இருந்தும் அதிகளவில் பொதுமக்கள் ஏலகிரி மலைக்கு சென்றனர். மேலும் குழந்தைகளுக்கு தேவையான பொருள் உணவுப் பொருட்களை வாங்கி கொடுத்தும் பொழுதுபோக்கு பூங்காக்களில், சிறுவர்கள் பூங்காவில் குழந்தைகளை விளையாட செய்தும் மகிழ்ந்தனர்.




# காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டும்! - அன்புமணி வலியுறுத்தல்



**சென்னை, ஏப்.28:** பா.ம.க. தலைவர் மருத்துவர் அன்புமணி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

தமிழ்நாடு மற்றும் புதுவைக்கு காவிரியில் தண்ணீர் வழங்குவது குறித்து விவாதிப்பதற்கான காவிரி மேலாண்மை ஆணையத்தின் 50-ஆம் கூட்டம் டெல்லியில் நாளை மறுநாள் ஏப்ரல் 29-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தில் அங்கம் வகிக்கும் 4 மாநிலங்களில் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளம் ஆகிய மாநிலங்களில் முழு அதிகாரம் பெற்ற அரசுகள் இல்லாத சூழலில் இந்தக் கூட்டத்தை நடத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது ஆகும்.

காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் காவிரி நடுவர் மன்றமும், உச்சநீதிமன்றமும் அளித்தத் தீர்ப்பின் அடிப்படையில் கர்நாடக அணைகளில் இருந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தருவது குறித்து மட்டும் விவாதிக்கப்பட்டால் அதில் எந்த சிக்கலும் இல்லை. ஆனால், காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணையை கட்டுவதற்கு குறுக்கு வழியிலாவது அனுமதி பெற்றுவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கும் கர்நாடக அரசு, இப்போதுள்ள சூழலை பயன்படுத்திக் கொண்டு மேகதாது அணை குறித்து காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்க வேண்டும் என்று வலியுறுத்த முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மேகதாது அணை குறித்து காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டால், தமிழ்நாட்டின் சார்பில் எத்தகைய நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்பது குறித்து கூட்டத்தில் பங்கேற்கும் நீர்வளத்துறை செயலாளருக்கு எந்த வழிகாட்டுதலும் வழங்கப்படவில்லை. தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவடைந்து முடிவுகள் அறிவிக்கப்படாத நிலையில், இப்போதுள்ள அரசால் எந்தக் கொள்கை முடிவுகளையும் எடுக்க முடியாது. இத்தகைய சூழலில் கூட்டத்தில் பங்கேற்கும் அதிகாரிகள் தவறான நிலைப்பாட்டை எடுத்தால் அது தமிழ்நாட்டுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதற்கான கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் மேகதாது அணை கட்ட அனுமதி அளிப்பது குறித்து பரிந்துரைக்கும்படி காவிரி மேலாண்மை ஆணையத்தை மத்திய நீர்வள ஆணையம் 2019-ஆம் ஆண்டில் கேட்டுக்கொண்டது. எனினும், அதற்கு பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட தமிழக கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து, விரிவான திட்ட அறிக்கை குறித்து காவிரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டங்களில் விவாதிக்கக் கூடாது என்று தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்தது. அதனால், விரிவான திட்ட அறிக்கை பற்றி நீண்ட காலமாக விவாதிக்கப்படாமல் இருந்த நிலையில், அது குறித்து மத்திய நீர்வள ஆணையமே முடிவு செய்து கொள்ளலாம் என்று கூறிய மேலாண்மை ஆணையம், அந்த அறிக்கையையும் திருப்பி அனுப்பிவிட்டது.

இத்தகைய சூழலில் தான் மேகதாது அணை குறித்த விரிவான திட்ட அறிக்கை குறித்து, மேலாண்மை ஆணையம் விவாதிக்க தடை விதிக்க வேண்டும் என்று கோரி தமிழகத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை திமுக அரசு திறம்பட நடத்தாததால், மேகதாது அணை குறித்த விரிவான திட்ட அறிக்கையை காவிரி மேலாண்மை ஆணையம் விவாதிக்க தடையில்லை என்று கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. அதனால், நாளை மறுநாள் நடைபெறவுள்ளக் கூட்டத்தில் மேகதாது அணை குறித்து கர்நாடக அரசு சிக்கல் எழுப்பும் வாய்ப்புள்ளது.

எனவே, மேகதாது அணை விவகாரத்தில் காவிரி பாசன மாவட்ட விவசாயிகளின் நலன்களுக்கு எதிராக முடிவெடுக்கப்படுவதைத் தவிர்க்க நாளை மறுநாள் டெல்லியில் நடைபெறவுள்ள காவிரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டத்தை தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளம் ஆகிய மாநிலங்களில் புதிய அரசுகள் பங்கேற்கும் வரை ஒத்திவைக்க வேண்டும்; ஒருவேளை கூட்டத்தை நடத்துவது தவிர்க்க முடியாதது என்றால், அதில் மேகதாது அணை விவகாரம் குறித்து விவாதிக்கப்படாது என்று காவிரி நீர் மேலாண்மை ஆணையம் முன்கூட்டியே உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனதின் குரல் நிகழ்ச்சியில் தமிழகத்தை பெருமைப்படுத்தினார் பிரதமர் மோடி

## நயினார் நாகேந்திரன் பெருமிதம்



**சென்னை, ஏப்.28:** மனதின் குரல் நிகழ்ச்சியில் தமிழகம் குறித்து பிரதமர் மோடி பல்வேறு இடங்களில் பெருமையுடன் குறிப்பிட்டார் என நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார். தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் தளம் பதிவில் கூறியிருப்பதாவது:

"மாதந்தோறும் 'மனதின் குரல்' என்னும் நிகழ்ச்சியின் வாயிலாக பாரதப் பிரதமர் நரேந்திர மோடி, நாட்டுமக்களிடம் உரையாடி வருவது நாம் அனைவரும் அறிந்ததே.

அந்த வகையில் 133ம் அத்தியாயமான இன்றைய(நேற்று) மனதின் குரல் நிகழ்ச்சியில், தன்னிலையான அணுக்கருப்பிளவு சங்கிலி தொடர் வினையை நமது தமிழகத்தின் கல்பாக்கம் அணு மின்நிலையம் வெற்றிகரமாக எட்டிவிட்டதை மகிழ்வுடன் பகிர்ந்து கொண்டார். அதேபோல, காற்றின் வாயிலாக மின்சாரம் உற்பத்தி செய்வதில் தமிழகம் முக்கியப் பங்காற்றி வருவதையும் பெருமையுடன் குறிப்பிட்டார்.

பிரான்ஸில் நடைபெற்ற கணித ஒலிம்பியாட் தேர்வில் உலகளவில் ஆறாவது இடத்தைப் பிடித்து சாதித்த நமது பாரத தேசக் குழந்தைகளைக் குறிப்பிடும் போது, வெண்கலப் பதக்கம் வென்ற சென்னையைச் சேர்ந்த மாணவி செல்வி. ஷிவானி பரத் குமாரை பாராட்டியது மகிழ்ச்சியளிக்கிறது. மேலும், புத்த பூர்ணிமாவை முன்னிட்டு, புத்தபெருமான் போதித்த நெறிகளை அனைவரும் கடைபிடிக்க வேண்டுமெனவும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2026 மக்கள்தொகை கணக்கெடுப்பில் பாரத மக்கள் பெருவாரியாகப் பங்குபெறவும் அன்புடன் வலியுறுத்தினார். இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM